# இந்துகேசரி

# 2014

0057

PE... ...ERENCE
... ...llege




இதழ் – I

PERMANENT REFERENCE
J/Chavakachcheri Hindu College

## கற்றல் வள நிலையம்,

## யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# கல்லூரிக் கீதம்

PERMANENT REFERENCE
J/Chavakachcheri Hindu College

**இராகம்: தர்பார்** **தாளம்: ரூபகம்**

0057

***பல்லவி***

வாழ்க இந்துக் கல்லூரி வாழ்கவே - வாழ்கவே
வாழ்க இந்துக் கல்லூரி வாழ்கவே - வாழ்கவே

**அனுபல்லவி**

வாழ்க நம்திரு வாழ்க நம் கலை
நாளும் நன்மையும் உண்மையும் ஓங்கவே
(வாழ்க)

***சரணம்***

அறமும் அன்பும் அருளும் தழைக்க
ஆன்மநேய உணர்வு செழிக்க
உறவு கனிந்தே உயர்வு நிலைக்க
உலகில் புகழும் அறிவும் தரிக்க
(வாழ்க)

*எஸ்.எஸ்.இரத்தினம்*

## கல்லூரி முதல்வரின் ஆசியுரை

இன்று நவீன கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நூலகம் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. வெறுமனே நூற்தொகுதிகளுக்குரிய இடமாக இருந்த நூலகங்கள் இன்று கற்றலுக்குரிய சகல கட்புல செவிப்புல சாதனங்களையும் உபகரணங்களையும் வளங்களையும் கொண்டு விளங்கும் வள நிலையங்களாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு மாற்றியமைக்கப்படும் நடவடிக்கைகளின் ஒரு வடிவமாகவே இச் சஞ்சிகையாக்கத்தையும் காணமுடிகின்றது.

இன்றைய மாணவ சமுதாயத்தை நன்னெறிப்படுத்தவும் கற்றல் சாதனங்களைத் தேடி ஒழுங்கமைத்து உரிய காலத்தில் வழங்கவும் இவ் வளநிலையம் உதவ வேண்டிய கடப்பாட்டில் உள்ளது. அவ்வகையில் நூலக செயற்பாட்டை மேம்படுத்தவும் மாணவர்களின் கற்றலுக்கு மேலாக வாசிப்புப்பழக்கத்தைத் தூண்டவும் எழுத்தாற்றலை வளர்க்கவும் இவ்வாறான சஞ்சிகையாக்கங்களோடு மாணவர்களை இணைக்க வேண்டியுள்ளது. நூலகங்களுக்கிடையே நடாத்தப்படும் போட்டியானது, மாணவர்களை நூலகத்திற்கு நாடச்செய்வதோடு கற்றல் வள நிலையத்தை மேலும் வளமுள்ளதாக்கி மாணவர்களுக்கு தன் உச்சப்பயன்பாட்டை வழங்கத் தூண்டுகோலாக அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

எம்மாணவச் செல்வங்களின் படைப்புக்களைத் தாங்கி வரும் “இந்துகேசரி” எனும் இச்சஞ்சிகை எதிர்வரும் காலங்களில் பல்லாயிரம் பிரதிகளில் வெளிவரவேண்டும் என எதிர்பார்க்கின்றேன். இப்போட்டிகளை நடாத்தி சிறந்த படைப்புக்களைத் தெரிந்து பிரதி செய்து சஞ்சிகையாக்கியமை பாராட்டுதற்கு உரியது. இச்சஞ்சிகைக்கு உழைத்த அனைவரையும் பாராட்டுகின்றேன். இச்சஞ்சிகை மேலும் சிறக்க என் நல்லாசிகள்.

திரு.அ.கயிலாயபிள்ளை,
அதிபர்,
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# இதழாசிரியரின் இதயத்தில் இருந்து.......

மாணவர்களின் சிந்தனையாற்றலும் அறிவாற்றலும் அளவற்று விளங்கும் இக்காலத்தில் அவர்களைச் சரியான பாதைக்கு அழைத்துச் செல்வது இன்றைய கற்றோர் கரங்களில் கையளிக்கப்பட்டுள்ளது. எப்போதும் விரைவாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அவர்கள் உலகத்தில் நாம் நுழைந்து ஏற்ற இலக்குகளைக்காட்டிவிட்டால் போதும். அவர்கள் தங்கள் முத்திரைகளைப் பதித்து விடுவார்கள். அறிவுப்பசியோடு வரும் மாணவர்க்கு ஏற்ற நூல்களை வழங்குவதும், பசியின்றி பொழுது போக்க வரும் மாணவர்களுக்கு பசியை ஏற்படுத்தவும், ஆர்வத்தைத் தூண்டவும் நூல்களை மட்டுமன்றி ஏனைய வளங்களையும் வழங்கவேண்டியுள்ளது. அப்பணி செய்ய உறுதுணைபுரியும் கல்லூரி நூலக சமூகத்துக்கு நான் தலைசாய்க்கின்றேன். நூலகத்தை நூல்களோடு நிறுத்திவிடாது ஏனைய வள வாய்ப்புக்களைப் பெற்றுத்தந்த கல்லூரி முதல்வருக்கு இவ்விடத்தில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

நூலக சஞ்சிகையைப் பொறுத்தவரை நாம் ஏற்கனவே "விடியல்" எனும் பெயருடன் சிறு சஞ்சிகையைத் தவணை இதழாக வெளியிட்டிருக்கின்றோம். வாசிப்புமாதப் போட்டிகளில் தெரிவுசெய்யப்படும் சிறந்த ஆக்கங்களை "தாமோதரன்" கல்லூரி மலரிலும் பிரசுரித்து வருகின்றோம். வகுப்பு மட்டத்தில் கையெழுத்துச்சஞ்சிகைளை வெளியிட்டிருக்கின்றோம். எனினும் நூலகத்தினால் போட்டிகளில் வெற்றிபெற்ற ஆக்கங்களைத் தொகுத்து சஞ்சிகையாக வெளியிடுவது இதுவே முதற்றடவையாகும். விடியல் தவணை இதழாக வெளிவர இந்து கேசரி ஆண்டிதழாக வெளிவருவான். அதற்காக நாம் உழைப்போம். இந்த வகையில் "இந்துகேசரி என்னும் இச்சஞ்சிகை நூலகத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற ஆக்கங்களைத் தாங்கி வருகின்றமை மகிழ்வைத்தருகின்றது. இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவர உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றது.

திருமதி.மீ.பாரதி,
நூலகப் பொறுப்பாசிரியர்,
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## பொருளடக்கம்


- ☞ கல்லூரிக்கீதம் i
- ☞ ஆசியுரை ii
- ☞ முன்னுரை iii
- ☞ பொருளடக்கம் iv
- ☞ கல்லூரி தூரநோக்கு 1
- ☞ கற்றல் வளநிலைய தூரநோக்கு 2
- ☞ கல்லூரி அமைப்பு 3
- ☞ கற்றல் வள நிலைய வரலாறு 4
- ☞ கவிதைக் கலசம் 11
- ☞ கட்டுரைக் கதம்பம் 22
- ☞ சிறுகதைச் சிற்பம் 32
- ☞ ஓவியச்சோலை 48
- ☞ கண்காட்சி அறிக்கை 56
- ☞ கண்காட்சிப்படங்கள் 58
- ☞ நன்றியுரை

## யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### தூர நோக்கு

ஆளுமையும் அறிவாற்றலும் உள்ள நற்பிரஜைகளை உருவாக்குவதன் மூலம் இலங்கையில் ஒரு முன்னணிப் பாடசாலையாக விளங்க வைத்தல்.

### *Vision*

Make the institution a leading one in the country by producing good citizens with knowledge and Personality.

### பணிக்கூற்று

தேசிய கல்விக் கொள்கைகளுக்கு ஏற்ப சகல மாணவர்களையும் வழிப் படுத்தி, சைவத் தமிழ் மரபுகளையும் விழுமியங்களையும் பேணி, நவீனத்து வத்திற்கு முகங்கொடுக்கும் வகையில் அதற்கான பலத்தையும் அர்ப்பணிப் பையும் அவர்களுக்கு வழங்குதல்.

### *Mission*

Provide enough strength and courage to all students to face the challenges of the modern trend in concord with the national policies of education in the context of Hindu Tamil traditions.

### மகுடவாசகம்

நாடுக

நலமே புரிக

ஒளிர்க

## கற்றல் வள நிலையத்தின்


### தூர நோக்கு

தரமான வாசகரை உருவாக்கும் தரமான வளநிலையம் ஆதல்.

### பணிக்கூற்று

பாடசாலை சமூகத்திற்குத் தேவையான தகவல் வளங்களை வழங்குவதோடு, தகவல்களைத் தேடிச் சுயமாகக் கற்கும் திறனை வளர்ப்பதன் மூலம் புத்தாக்கங்களைப் படைப்பதற்கும், தொடர் கல்விக்குமான வழியைக் காட்டி, மகிழ்ச்சிகரமான வாழ்வுக்குரிய நற்பிரஜைகளை உருவாக்கும் கற்றல் வளநிலையமாகச் செயற்படுதல்.

# கல்லூரி அமைப்பு


BUILDING ALIGNMENT
District : Jaffna
Divisional Secretariat : Thenmaradchy
Chavakachcheri
A - 9 Road
College Lane
Play Ground
Library
Science Block
Main Hall
T.V Hall
A
B
C
D
E
F
G
H
I
J
K
L
M
- well
- Water Tank
- Toilet
- Gate
- Block
- Wired- Fence
- Boundary Wall

REFERENCE
J/Chavakachcheri Hindu College

0057

# கற்றல் வளநிலைய வரலாறு

அறிவு ஆயுதமாகி விட்ட நாள்களில் வாழும் நாம் அறிவு தரும் புத்தகங்களைப் பேணிப் பாதுகாத்து நாமும் மற்றோரும் கற்க வழிசெய்தல் வேண்டும். வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் பூர்த்திசெய்யப்பட்டதும் முதலிடம் கற்றல்வள நிலையங்களுக்கும் புத்தகசாலைகளுக்கும் தரப்படல் வேண்டும்.

'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற நம் முன்னோர் கூற்றை ஏற்றுக் கற்றலை மேலும் மேம்படச் செய்யும் நோக்குடன் 1940 களில் கல்லூரி அதிபராக திரு. முத்துக்குமாரு அவர்கள் இருந்த காலத்தில் எம் கல்லூரியாம் சாவகச்சேரி இந்துவில் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. அற்றைகளில் திரு.ராஜ் அரியரத்தினம் என்பவர் நூலகராகப் பணிபுரிந்து கற்றலுக்கு வலுச் சேர்த்தார். அக்காலப்பகுதியில் இன்றைய கணினி அறைகள் இருக்கின்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறுகட்டடத்தில் அதிபர் அலுவலகமும் அதனுடன் இணைந்ததாக நூலகமும் அமைந்து பெரும் கல்விப்பணியாற்றின. அப்போது சில நூறு புத்தகங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட நூலகம் பலதடைகளையும் தாண்டி வளர்ச்சி பெற்றது.

1976 காலப்பகுதிகளில் புத்தகங்கள் ஆயிரக்கணக்காகின. அக்காலத்தில் அதிபராக திரு.பூ.வெற்றிவேலு அவர்களும் நூலக அபிவிருத்திக்குழுச் செயலாளராக பிற்காலத்தில் எம் கல்லூரி அதிபராக இருந்த திரு.க.சந்திரசேகரா அவர்களும் பணியாற்றினர். நூல்களின் எண்ணிக்கை 16000 ஐ தாண்டியது. இந்நூல்களைப் பேணிப் பாதுகாத்துப் பயன் மிகப் பெற வேண்டும் என்ற நோக்கில் நூலகத்திற்கெனத் தனியான கட்டடம் அதிபர் அலுவலகத்திற்கு மேலாக அமைக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு நூலகக் கட்டடம் (P.T.A Library Block) என்ற பெயருடன் 60' X 20' அடியாக நிமிர்ந்து நின்ற இரு பகுதிகளைக் கொண்ட இவ் வள நிலையம் ஆசிரியரதும் மாணவரதும் பாவனைக்கென 1976 இல் திறந்து விடப்பட்டது. வாசிப்புப்பகுதி உசாத்துணைப்பகுதி என இரு பகுதிகளாக முதலில் இயங்கிய நூலகம் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இரவல் வழங்கும் பகுதியையும் ஆரம்பித்து திறம்பட இயங்கியது.

செந்தமிழ் இன்பம் சேர்த்திட நூல்கள் தந்ததும் நூலகமே
பழஞ்சந்ததியினரின் சரித்திர நூல்கள் தருவதும் நூலகமே
விந்தைகள் ஆயிரம் விளைந்திட வழிகள் சமைப்பதும் நூலகமே
விடியலை நோக்கி எம்மை அழைத்துச் செல்வதுவும் நூலகமே
என்பதற்கிணங்க 1976இல் தன் பணியை ஆரம்பித்த இந் நூலகக்கட்டடத் தொகுதியும் அதன் நூல்களும் இன்று வரை மாணவர்களது அறிவுப்பசியைப் போக்கி வருகின்றன.

1976 தொடக்கம் 2000ஆம் ஆண்டு தென்மராட்சி மக்களின் இடப்பெயர்வு ஏற்படும் காலப்பகுதி வரை திரு.பூ.வெற்றிவேலு அதிபர் அவர்களைத் தொடர்ந்து திரு. க. மகேஸ்வரன், திரு. எஸ். குகதாசன், திரு. க. சந்திரசேகரா, திரு. இ. கைலைநாதன் ஆகியோர் அதிபராக கடமையாற்றினர். அக்காலப்பகுதியில் அன்பளிப்புகளாகவும் பாடசாலை வருடாந்த நிதி ஒதுக்கீட்டிலும் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 1976 தொடக்கம் 1991 வரை நூலக அபிவிருத்திக்குழு செயலாளராக திரு. க. சந்திரசேகரா அவர்கள் பணியாற்றினார். 1991 தொடக்கம் 2014 ஆரம்பகாலம் வரை திரு.க.முத்துலிங்கம் அவர்கள் பணியாற்றி வந்தார்.

மு.வரதசாதன் அகிலன் சாண்டில்யன் போன்றோரின் சமூக சீர்திருத்தக் கதைகளும் கதைப் போக்கில் வரலாறு கூறும் நாவல்களும் ஈ.வே.ரா., பேறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றோரின் பகுத்தறிவுக் கட்டுரைகளும் மேடைப் பேச்சுக்களும் இலங்கைப் பேரறிஞர்களின் ஆக்கங்களும் ஆய்வுக் கட்டுரைகளும் எம் நூலகத்தில் காணப்பட்டு மாணவரது தேடலுக்கு விடை பகர்ந்தன.

மேலும் பார் புகழும் திருக்குறளும் பாரதியார் பாடல், பாரதிதாசன் கவிதைகள், பட்டுக் கோட்டையார் பாடல்கள், ஈழத்துச் சோமசுந்தரப் புலவர் பாடல்கள், புதுக்கவிதைகள், நாட்டார் பாடல்கள், தேவார திருவாசகங்கள், கம்ப இராமாயணம், வில்லி பாரதம், கீட்ஸ், பைரன் போன்றோரின் மேலைத்தேயக் கவிதைகள் யாவும் காணப்பட்டன. மேலைநாட்டறிஞர், நாடகாசிரியர் பேன்றோரின் படைப்புக்கள் ஆங்கில நூல்களாகவும் மொழி பெயர்ப்புக்களாகவும் காணப்பட்டன. இவற்றில் பெருமளவில் சேக்ஸ்பியர், பேரறிஞர் பெர்னாட்சோ ஆகியோரின் நுல்களைக் குறிப்பிடலாம். கிரேக்க தத்துவஞானி அரிஸ்ரோட்டில்

அவர் தம் மாணவன் பிளேட்டோ போன்றோரின் சிற்பவடிவங்களும் நூலகத்திற்கு மேலும் அணி சேர்த்தன.

இன்னும் மாணவரது அறிவையும் ஆளுமையையும் விருத்தி செய்யும் பொருட்டு கணிதவியல், புள்ளிவிபரவியல், விஞ்ஞானத்துறை சார்ந்த நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், அழகியல் துறை சார்ந்த நூல்கள், வாழ்க்கை வரலாறுகள், சமய நூல்கள், தொழில் வழிகாட்டி நூல்கள், ' பொருளியல், முகாமைத்துவ நூல்கள் என மாணவர் ஆசிரியர்களது தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பல நூல்கள் ஒழுங்காகக் காட்சிப்படுத்தப்பட்டு தூயியின் தசம ,வகுப்பின் 21ம் பதிப்பிற்கிணங்க வகுப்புப் , பிரிவுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

உசாத்துணை நூல்களாகக் கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், பொது அறிவு நூல்கள், வீடியோ படச் சுருள்கள் என்பன சேமிக்கப் பட்டிருந்தன.

இக்காலப்பகுதியில் TV மண்டபம், பாட நூல்களில் உள்ள பாடப் பகுதிகளை இலகுவாக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட வீடியோ காட்சிகளைத் தொலைக்காட்சியில் பார்க்கும் இடமாகவும் (உ-ம்: சூழலை மாசுறாமல் காத்தல், இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறல், சூழலில் உள்ள அங்கிகள், கர்ணன் வாழ்க்கை வரலாறு) போன்ற நிகழ்வுகள் முழுநிலாக் கருத்தரங்குகள் போன்ற நிகழ்வுகளின் போது கேட்போர் கூடமாகவும் பயன்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

நூலகத்தின் வாசிகசாலைப் பகுதியில் வீரகேசரி, தினகரன், ஈழநாடு, உதயன், சுதந்திரன் போன்ற தமிழ்ப் பத்திரிகைகளும் டெய்லிநியூஸ், டெய்லி மிரர், சண்டே லீடர், சன்டே ஒப்சேவர் போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளும் கொள்வனவு செய்யப்பட்டு மாணவரின் மொழி அறிவும் பொது அறிவும் வளர வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அத்துடன் கல்கண்டு, குமுதம், கல்கி, ஆனந்த விகடன், கலைமகள், தினமணிக் கதிர், நல்வழி போன்ற இந்திய சஞ்சிகைகளும் அம்புலி மாமா போன்ற சிறுவர் நூல்களும் வாங்கி மாணவர்க்கு வழங்கப்பட்டதனால் மாணவரது கற்பனை ஆற்றல் வளர்க்கப்பட்டது. இந்தியா ருடே, ஸ்போட்ஸ் ஸ்ரார், கூரியர் வெளியீடுகள் போன்றவை அரசியல், விளையாட்டு, பொது விடயங்கள் பற்றிய மேலதிக தகவல்களை மாணவர்க்கு நல்கின.

2000ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஏற்பட்ட போரியல் நெருக்கடியும் அதன் காரணமான தென்மராட்சி மக்களின் இடப்பெயர்வும் தவிர்க்க முடியாது ஏற்பட்டது. இதனால் கல்லூரியும் இடம்பெயர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இக் காலப்பகுதியில் அதிபர்களாக திரு.இ.கயிலைநாதன் அவர்களும் திரு.க.சந்திரசேகரா அவர்களும் பணி புரிந்தனர். கல்லூரி இரு பகுதிகளாக வடமராட்சியில் வாழ்ந்து கொண்டிருந்த மாணவர்களுக்காக யா/நெல்லியடி மத்திய கல்லூரியிலும் யாழ் நகர்ப்பகுதியிலும் வலிகாமப் பகுதிகளிலும் வாழ்ந்த மாணவர்களுக்காக யா/ இணுவில் மத்திய கல்லூரியிலும் இயங்கின. மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவதற்காகவும் தேர்வுக்கு ஆயத்தம் செய்வதற்காகவும் ஆசிரியர்கள் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தனர். ஆசிரியர்கள், மாணவர் தேவையைப் பூர்த்தி செய்ய புத்தகங்கள் தேவைப்பட்டன. ஆனால் கல்லூரி நூலகம் எறிகணை வீச்சுக்கும் பெரும் போருக்கும் முகம் கொடுத்தபடி யா/ சாவகச்சேரி இந்துவில் யாருக்கும் பயன்படாமல் இருந்தது.

இந்த நிலையை மாற்றும் எண்ணம் கொண்டவராக செயற்பட்டார் எங்கள் அதிபர் திரு.இ.கயிலைநாதன் அவர்கள் இடம்பெயர்ந்து இயங்கும் கல்லூரிச் சொத்துக்களை மீட்கும் பணி, எறிகணை வீச்சுக்கள் மத்தியிலும் திரு.இ.கயிலைநாதன் அதிபர் அவர்களால் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்டது. பார ஊர்திகள் தென்மராட்சி நோக்கி அதிபர் ஆசிரியருடன் பயணித்தன. அந்த மீட்புப் பொருள்களில் 5000அளவிலான நூலகப் புத்தகங்கள் அள்ளி எடுக்கப்பபட்டன. உயிராபத்து நிறைந்த அம் மீட்புப் பணி செய்தோரை என்றும் பாடசாலை சமூகமும் தென்மராட்சி மக்களும் நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டவர்கள்.

மீட்கப்பட்ட புத்தகங்கள் மீண்டும் நெல்லியடியிலுள்ள கணித மத்திய நிலையம் என்றதனியார் கல்வி நிலையத்தில் தன் நூலகப்பணியை மட்டுப்படுத்திய அளவில் ஆரம்பித்தது. இரவல் வழங்கும் பகுதியில் ஆசிரியர்களும் உயர்வகுப்பு மாணவர்களும் மட்டும் புத்தகங்களைப் பெறும் வாய்ப்பைப் பெற்றனர். இக்காலப்பகுதியில் நூலக அபிவிருத்திக் குழுசெயலாளராக திரு.க. முத்துலிங்கம் அவர்களும் உதவி நூலகராக திருமதி ஜெ .விஜயநிர்மலா அவர்களும் பணிபுரிந்தனர்.

2002 ஆம் ஆண்டு பெரும் முயற்சியுடன் கல்லூரி தன் சொந்த நிலத்தில் காலூன்றியது. T.V மண்டபத்தில் நூலகம் இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. நூலகம் புத்தகங்களைப் பாதுகாப்பாக வைக்க முடியாதவாறு சேதமடைந்திருந்தது. நூலகக்கட்டிடம் புனர் நிர்மானம் செய்யப்பட்டது. புத்தகங்கள் மீண்டும் நூலகத்தில் அடுக்கப்பட்டது. அதிபர் திரு.இ.கயிலைநாதன் அவர்கள் இலங்கை மத்திய அரசின் தேசிய பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து மூன்று தடவைகளில் ரூபா ஒரு இலட்சத்திற்கான புத்தகங்களைக் கொள்வனவு செய்தார்.

இதனைத்தொடர்ந்து யா/ இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் நிதியில் இருந்து பழைய மாணவர் சங்கத்தின் ஒரு பிரிவான 'நூல் வழங்குவோம்' என்ற அமைப்பினர் 'நூல் வழங்குவோம்' என்ற மகுடவாசகத்துடன் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தனர். ஆசிரிய பவுண்டேசன் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்து உதவியது. 2007 ஆம் ஆண்டு உலகப் பார்வை (World Vision) நிறுவனத்தினர் ரூபா 50,000 பெறுமதியான நூல்களைத் தந்துள்ளனர். அதனை தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக நூலகத்தினர் க.பொ.த உயர்தர மானவர்களுக்குத் தேவையான 82 நூல்களை அன்பளிப்புச் செய்தனர். விலை மதிப்புள்ள நூல்களை வழங்கிய அனைவருக்கும் கல்லூரி சமூகத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். ஒவ்வொரு வருடமும் பாடசாலை வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் நூல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. 2005ஆம் ஆண்டு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் தேசிய பாடசாலைக்கான நிதி ஒதுக்கீட்டில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிகழ்த்தப்பட்ட புத்தகக் கண்காட்சிக்குச் சென்ற நூலக அபிவிருத்திக் குழவினரால் கொள்வனவு செய்யப்பட்டன. 2006 இல் 1,27,500 ரூபாவும் மத்திய அரசால் நூல் கொள்வனவுக்கு வழங்கப்பட்டு புத்தகம் வாங்கப்பட்டது. அப்போது நூல்களின் எண்ணிக்கை ஓரளவு பெருகியது.

2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் நூலகத்தை மேலும் வளமுள்ளதாக்கும் நோக்குடன் புதிய கட்டடம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. திரு.இ.கயிலைநாதன் அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட நூலகக் கட்டடப் பணி அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் காலத்தில்

முடிக்கப்பட்டு மாணவர் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆயினும் மேல் மாடி பூரணப்படுத்தப் போதிய நிதி இன்மையால் மாடிக் கட்டடம் பூர்த்தியாக்கப்படவில்லை.

உசாத்துணைப் பகுதி இரவல் வழங்கும் பகுதி எனப் பிரிக்கப்பட்டு இரவல் வழங்கும் பகுதி அலுவலகத்தின் மேற்பகுதியிலும் உசாத்துணைப் பகுதி RRAN உடன் இணைந்த புதிய நூலகக் கட்டடத்திலும் இயங்கியது. இக்காலப்பகுதியில் 9119 புத்தகங்களுடன் தன் சேவையை வழங்கி மாணவரது அறிவுத் தேவையைப் பூர்த்தி செய்து நின்றது. மாணவர்களது வாசிப்புப் பழக்கத்தையும் நூலகங்களைப் பயன்படுத்தும் அளவையும் அதிகரிக்கும் நோக்குடன் ஆசிரிய நூலகர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த அடிப்படையில் 2005 ஆம் ஆண்டில் எம் கல்லூரிக்கு திருமதி. மீனலோசினி பாரதி அவர்கள் ஆசிரிய நூலகராக நியமிக்கப்பட்டார்.

2008 ஆம் ஆண்டு மத்திய கல்வி அமைச்சினால் நூலக நூல் கொள்வனவுக்காக ரூபா 97,000 ஒதுக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் 180நாள் வேலைத்திட்டத்தின் கீழ் 225அடி நீளமான RRAN கட்டடத்தின் மேற்றள வேலை பூர்த்தியாக்கப்பட்டது. இதனுள் நூலக கட்டடமும் அடங்கியிருந்தது.இவ்வாண்டு மாணவர்களுக்காக "வாசகர் வட்டமும்" ஆரம்பிக்கப்பட்டது. இவ் வாசகர் வட்டச் செயற்பாட்டினால் மாணவர்களின் நூலகப்பாவனை அதிகரித்தது. வாசகர்வட்டத்தினால் தேசிய வாசிப்புமாதத்தை முன்னிட்டு நூல் சேர்க்கைகளும் இடம்பெற்றன. இதனால் நூல்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச்சென்றன.

2013 ஆம் ஆண்டு மாணவர்களின் கல்வித்தேவையை நிறைவேற்றும் பொருட்டு எமது நூலகம் நவீனத்துவத்தை உள்வாங்கும் விதத்தில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. நூல்கள் இரவல் வழங்கும் சேவையோடு இணையச்சேவை பல்லூடக எறியி மூலமான கற்றல், போட்டோ பிரதிச் சேவை என்பனவும் இவ்வருடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காகக் கனடா பழைய மாணவர் சங்கத்தினர் 377,479.73 ரூபா (கனேடியன் டொலர் 3000) பணத்தினை வழங்கியுள்ளனர்.

மேலும் அரும்பொருட்களை அழியவிடாது அடுத்த சந்ததியினருக்கும் கையளிக்கும் நோக்கில் அரும்பொருட் காட்சிப்பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு மத்திய கல்வியமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 50,000 இற்கு இசுறுபாயாவில் நடைபொற்ற புத்தகக்கண்காட்சியில் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மேலும் பாடசாலை அபிவிருத்தி நிதியில்ஒரு இலட்சம் ரூபாவிற்கு கொழும்பில் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. தற்பொழுது எமது நூலகத்தில் 14,000 இற்கு மேற்பட்ட நூல்கள் உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எதிர்காலத்தல் எமது கல்லூரி நூலகம் ஒரு பல்கலைக்கழக நூலகம் போல விரிவு படுத்தப்படும் என்பதில் ஐயம் இல்லை.

* * *

# யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## தேசிய வாசிப்புமாதத்தையொட்டி நூலகத்தினால் வெளியிடப்பட இருக்கும் சஞ்சிகைக்காக நடாத்தப்படும் ஆக்கப்போட்டிகள் -2014

| போட்டிகள் | பிரிவு | தலைப்பு | சொற்கள் | காலம் இடம் |
|---|---|---|---|---|
| கட்டுரை | 3 (தரம் 6,7,8) | பிடித்த நூலும் சுவைத்த பகுதிய | 100-150 | 02-06-2014 பி.ப.1 மணி நூலகம் |
| | 4 (தரம் 9,10,11 | என்தாயும் என் தாய் மொழி யும் | 200-250 | 03-06-2014 பி.ப 1. மணி |
| | 5 (தரம் 12,13) | என்னைக்கவர்ந்த எழுத்தாளர் | 250-350 | 29-05-2014 பி.ப 1.மணி |
| கவிதை | 4 (தரம் 9,10,11 | கனவுகளைச் சுமந்து | 80-100 | 03-06-2014 பி.ப 1. மணி |
| 16-06-2014 பி.ப.1 மணி நூலகம் | 5 (தரம் 12,13) | மீண்டு(ம்) வருவோம் | 100-120 | 29-05-2014 பி.ப 1.மணி |
| சிறுகதை | 4 (தரம் 9,10,11 | காலங்கள் காத்திருக்காது | 250-300 | 03-06-2014 பி.ப 1. மணி |
| | 5 (தரம் 12,13) | உறங்காத கண்கள் | 300-350 | 29-05-2014 பி.ப 1.மணி |
| சித்திரம் | 3 (தரம் 6,7,8) | வாசிப்பின் மகத்துவம் | | 13-06-2014 பி.ப.1 மணி நூலகம் |
| | 4 (தரம் 9,10,11 | ஓய்வுநேரமும் வாசிப்பும் | | 13-06-2014 பி.ப.1 மணி நூலகம் |
| | 5 (தரம் 12,13) | வறுமையும் வாசிப்பும் | | 13-06-2014 பி.ப.1 மணி நூலகம் |
| சுவரொட்டி | 4 (தரம் 9,10,11 | நூலென்னும் நண்பன் | | 16-06-2014 பி.ப.1 மணி நூலகம் |
| | 5 (தரம் 12,13) | (சு)வாசிக்க மறவேல் | | 16-06-2014 பி.ப.1 மணி நூலகம் |

- ஒவ்வொரு வகுப்பிலும் குறித்த போட்டிகளில் இருவர் மட்டுமே பங்குபற்ற முடியும்.
- ஒருமாணவர் ஒருபோட்டியில் மட்டுமே பங்குபற்ற முடியும்.

.......................

நூலகம் அதிபர்

# J/CHAVAKACHCHERI HINDU COLLEGE

(National School)

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

CHAVAKACHCHERI
சாவகச்சேரி

☎:021-2270350
☎:021-2270351

**E-mail:chava hindu @gmail.com**


எனது இல: J/CHC/1/5

திகதி: 27.06.2014

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

### பாடசாலை நூலக சஞ்சிகை ஆக்க போட்டி முடிவுகள்

பாடசாலை நூலகத்தினால் வெளியிடப்பட இருக்கும் கையெழுத்துச்சஞ்சிகைக்காக மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆக்கப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்ற மாணவர்களது பெயர் விபரங்கள் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

#### வாசிப்பு

பிரிவு III (6 - 8)
செல்வன்.செல்வசுந்தரம் இளங்கதிர்

பிரிவு V
செல்வன்.ஸ்ரீமுருகதாஸ் துளசிகரன்

#### கட்டுரை

பிரிவு III (6 - 8)
செல்வி.கனகரத்தினம் யதுஷா

பிரிவு IV (9 - 11)
செல்வி.சிவானந்தம் சோபனா

பிரிவு V (12 - 13)
செல்வி.பாலச்சந்திரன் லக்ஷனா

#### கவிதை

பிரிவு IV (9 - 11)
செல்வி.அரியரத்தினம் சாம்பவி

பிரிவு V (12 - 13)
செல்வி.பாலசுப்பிரமணியம் துவார்கா

#### சிறுகதை

பிரிவு IV
செல்வி.இரவீந்திரன் மதுஷா

#### சுவரொட்டி

பிரிவு IV
செல்வன்.விநாயகேஸ்வரன் கீர்த்திகன்

பிரிவு V
செல்வன்.கலாமோகன் பிரியங்கன்

#### சித்திரம்

பிரிவு III
செல்வன்.சத்தியானந்தன் லதுஷிகன்

பிரிவு IV
செல்வி.சிறிபிரகாஷ் சிவசங்கவி

பிரிவு V
செல்வன்.விக்கினேஸ்வரன் லவன்

..................
அதிபர்

A. Kailasapillai
Principal
J/Chavakachcheri Hindu College
National School
Chavakachcheri

## கனவுகளை சுமந்து ....1

அ.சாம்பவி, தரம் : 10F

செங்கதிரோன் பூமிக்கதவை தட்ட
மலர்களெல்லாம் பரவசத்தால் மலர
பனித்துளிகள் வெட்கத்தில் ஓடி ஒழிய
பஞ்சுக் கரங்களில் அரிவாளுடன்
பரிதாபமாக வந்தாள் அச் சிறுமி.

கையில் ஏடு தாங்கி பள்ளி செல்லும் வேளையில்
கரங்களில் அரிவாளுடனும் கண்களில்
நீர் தேம்பவும் ஏன் செல்கிறாள் அவள்?
இதுதான் காலச் சக்கரத்தின்
நிர்ப்பந்தமோ என்னவோ?

சமவயதினர் பேரொளியை நாட
இவளோ வறுமையின் கொடுமையால்
காரிருளை நாட எண்ணினாளோ?
இவளின் அவலத்தை பார்த்த பெற்றவள்
பரிதவித்து நின்றாளே.

வரும் காலம் எனக்கு வசந்தமாகாதோ?
என் சொல் கேட்க நால்வர் இருக்க மாட்டாரோ?
என் அன்னையும் செல்வச் செழிப்பில் வாழ மாட்டாளோ?
என் வறுமையம் எனை விட்டு நீங்க மாட்டாதோ?
காலங்கள் மாறி என் வாழ்வில் தென்றல் வீசாதோ?

கனவுகள் பல இருந்தும் அது எனக்கு
எட்டாக் கனியாகத்தான் போகுமோ?
ஆண்டிக்கும் என்மேல் இரக்கம் வராதா?
அவனாவது எனக்குக் கை கொடுக்க மாட்டானோ?

எண்ணங்கள் பல சுமந்தும் கனவுகள்
பல தாங்கியும் இவ்வாறு செல்லும்
இவளின் மனது எண்ணற்ற சுமைகளை
எண்ணற்ற கனவுகளையும் சுமந்து
களத்தை நோக்கிச் செல்கிறது அங்கே.

* * *

## கனவுகளைச் சுமந்து ..... 2

**இ.அனசூயா**, தரம் : $10^F$

ஓராயிரம் விதைகளில்
உதித்த நினைவுகளாய்
கவியொன்று புனைகின்றேன்
கனவுகளைச் சுமந்தவளாய்.

வேதனை தினந்தோறும்
விரிசலாய்க் கடக்கவே
வைத்தியராகவென்று
என் நெஞ்சில் எழுதிவைத்து
சுமக்கின்றேன் என்கனவினை வலியில்லாமல்.

பள்ளி வாழ்க்கையின்
எள்ளல் நகைப்பின் மத்தியில்
ஏராளம் கனவுகள்
நடந்தவை, நடக்காதவையாய்.

கனவு என்பது கற்பனையல்ல
எம் தூக்கத்தைக் கலைப்பதுதான்
அவ்வழியில் என் பள்ளி நகைப்புக்கள்
எத்தனை! எத்தனை போதாது
இவ் ஏடு.

பள்ளி வாழ்க்கையின்
எண்ணற்ற விந்தைகளை
நெஞ்சில் சுமக்கின்றேன் கனவுளாய்
பள்ளி முடிவதற்குள் விளையாட்டு
வீராங்கனையாக ஒரு போதாவது
வென்று விடவேண்டும் என்ற கனவு.
நாளொரு தினம் பொழுதாக
என்மன வானில் பல கனவுகள்
சிறகடிக்கும் பட்டாம்பூச்சியாம் - என்
நினைவு ஓரங்களில் கண்சிமிட்டுகின்றன.
கல்வியில் சிறந்து
கலைகளில் பண்டிதராக
மிளிர வேண்டும் என்பதும்
என் கனவுகள் தான்

எண்ணற்ற கனவுகள்
என்னோடும் ஒன்றாக
எதிர்கால விடியலுக்காய்
இரங்குகின்றன — என் கனவுச் சித்திரிப்பிலிருந்தும்.

இன்னும் ஒன்றாகப்
பள்ளி நாட்கள் என்றும்
பூட்டப்படாத கதவுளாய்
என் 18 வயதின் எல்லையிலிருந்து

இப்படியே பல இலட்சியக் கோவையையும்
கனவுச் சித்திரிப்பையும்
சுமக்க முடியாத்வளாய்ச் சுமக்கின்றேன்
என் நெஞ்சின் ஓரத்திலிருந்து.
இன்னும் பல கனவுகளைச் சுமந்து ....

* * *

## கனவுகளைச் சுமந்து ..... 3

**அ. ஜனுஷா,** தரம் : 9D

கனவுகளைச் சுமந்து
கைகளில் புத்தகமேந்தி
விழிகளில் கனவு சுமந்து
பயணிக்கின்றாள் பாவை மகள்.

நெஞ்சமது பாரமாயக் கனக்க
பொதியின் சுமை பஞ்சாயப் போனது
கனவுகளுக்கு மத்தியில்
கல்லாய் நிற்கின்றாள் பாவை மகள்.

கல்லூரி வீதியில் கால்பதித்த
நாட்களில்
வண்ண கோலமிட்டு வண்ணத்து
பூச்சிகளாய்
வட்ட மிட்ட காலங்களில்
சந்தோசமாக
திரிந்தாள் பாவை மகள்.

நித்தியமாய் நிலைத்திருக்கும்
புன்னகையும்
கற்றபடி நடக்கும் கம்பீரமும்
அணிகலன்களாய் விளங்க
பாவை மகள் பயணித்தாள்.

கனவுகளைக் கற்பனை தொடராக
கல்லூரிக் காலங்களில் தொடர்ந்து
மனதில் கனவைச் சுமந்து
இனிமையாக
சுற்றித் திரிந்தாள் பாவை மகள்.

தன் கனவு நிறைவேறும் என்று
அந்தப் பாவை மகள்
சிகரத்தைத் தொட்டு ஆனந்தத்தில்
மிதந்து கொண்டிருந்தாள்.

கல்லூரிக் காலத்தில் தன்
கன்வு நிறைவேறிவிடும் - என்ற
இன்பத்தில் அவளுடைய மனம்
கனவைச் சுமந்து கொண்டிருந்தது.

கனவுகளை தனக்குள்ளே – சுமந்த
அந்தப் பாவை கல்லூரி நாட்களில்
தன் கனவை நண்பியுடன் கூறி
ஆறுதல் தேடுவாள்.

கனவுகளை சுமந்த பெண்
கனவு தான் தன் வாழ்க்கை –
என்று
நினைத்து கனவுலகத்தில்
மிதந்தாள் அந்தப் பாவை மகள்.

திடீரென ஏற்பட்ட சூழ்நிலை
காரணமாக
தனது கல்லூரிக் காலத்தை
தவறவிட்டாள் இதனால்
நிறைவேறாத
கனவை சுமக்கின்றாள் அந்தப்
பாவை.

ஏற்பட்ட சூழ்நிலை அந்த பாவையை
கவலைக்கு உட்படுத்தியதால்
தன் கனவை உள்ளத்தில்
சுமக்கின்றாள் பாவை.

கனவு நிறைவேறாத கவலை
அந்த பாவையை சுக்குநூறாய்
உடைத்ததால் கனவை
இன்றும் அன்றும் சுமப்பாள் பாவை.

* * *

## கனவுகளைச் சுமந்து ..... 4

**தி.துவாரகா,** தரம் $10^D$

புதிய உலகை புதிய உலகை
தேடிப்போகின்றேன்.
விழியின் துளியில் - தாயின்
நினைவைக்கரைத்து ஓடிப்
போகின்றேன்.

மீண்டும் நான் மீளப்போகின்றேன்
தூரமாய் நான் வாழப் போகின்றேன்
- என்
தாயை நான் தேடிப் போகின்றேன்
கனவிலே நான் கரையப்
போகின்றேன்

இது கனவா நனவா தெரியவில்லை
கனவாய் இருந்தால் என் வாழ்நாள்
இருளில் மூழ்கட்டும்
நனவாய் இருந்தால் பகலில்
வாழ்வே முடியட்டும்

தோளில் ஏற்றினாய் என்னை — நீ
உயரமாக்கினாய்.

மார்பில் முத்தம் தந்தாய் என்னை —
நீ
கவிஞனாக்கினாய்

உன்னைப்போல மண்ணில் எங்கும்
அழகு இல்லை என்பேன்
உன் கண்கள் போல விண்ணில்
எங்கும்
சக்தி இல்லை என்பேன்.

வேறொர் வானம் வேறோர் பூமி
என்னை ஏற்குமா?

தினம் தினம் உன் சிரிப்பைப்
பார்த்த — அந்த
கணம் கணம் என் மனதில் உண்டு
சினம் சினம் உன் முகத்தில்
இல்லாத
மனம் மனம் வேறு யார்க்கு உண்டு

உயிர் என்று என்னை நீயும் -
மறந்து
ஒருபோதும் சொல்லமாட்டாய்
உயிர் என்றால் என்றோ – ஓர் நாள்
பிரியும் என்பாய்

இப்போது நீயில்லை தாயே
அதனால் என்னிடம் என்
உயிரில்லை
இவ்வாறே என் பயணம்
தொடர்கின்றது
அழியாத கனவுகளைச் சுமந்து.

* * *

## மீண்டும் வருவோம் - 1

**துவாரகா,** தரம் :12$T_2$

ஆயிரம் தடைகளையும் தாண்டி
ஆகாய விண்மீன்களாய்
ஆதவனுக்கும் ஒளியை ஊட்டி
பெண்ணியம் வாழி வாழி
என முழங்கிட ஆதவனே
அடிமைத் தனத்திலிருந்து
மீண்டு வா நீ
மீண்டும் வா.

பெண்ணே!
அடிமை எனும் அடைக்கலத்தில்
அடையாமல் கிடக்க
அஞ்சாமையை ஒழித்து
அறியாமையைத் துரத்தி
தீய விசப் பாம்புகளை வேட்டையாடி
ஆணின் ஆட்டத்திற்கு
மறு ஆட்டம் ஆடாமல்
மீண்டும் வா பெண்ணே
மீண்டும் வா

வாய் விட்டுச் சிரிக்க
நோய் விட்டுப் போகுமா?
பெண்ணே
நீ வாய் விட்டுச் சிரித்தால்
நேர்கோடும் வளைந்திடுமா?
ஏன்? சிரித்தாலும்
நோய் தானே விட்டுப் போக
வேண்டும்.
பெண்ணே!
சிரித்து வாழப் பழகு பிறர்
சிரிக்க வாழ்ந்திடாதே.

ஆகாயம் பார்த்து ஏற முயன்றால்
படித்தது போதும் என்பர்
பெண்ணே
ஆண்டாளும் உனைப் பார்த்து
முட்டாள் என்றால்
பட்டிக் காட்டு மிருகம் என்பர்
பெண்ணே
பாரதியிடம் சொல்
பெண் அடக்குமுறையில் இருந்து
மீண்டு வர வழிகேள்

பெண்ணே
வழி கேள்.

ஆல மரத்தின் விழுதைப் போல்
ஆணித்தரமாய் நீ வளர்ந்தால்
ஆயிரமாயிரம் வேலியைத் தாண்டி
பறவைகளாய்ப் பறந்திட
பெண்ணே
அடைபட்ட நான்கு சுற்றுக்குள்
இருந்து மீண்டு வா.
பெண்ணே நீ
மீண்டும் வா.

இவ் உலகினை
இலங்கு நூல் போல் காத்திட
பெண்ணே
சிறுமியாய் பிள்ளையாய்
அன்னையாய் தெய்வமாய்
மீண்டும் மீண்டும்
நீ வருவதேனோ?
உன்னைப் பழிக்கும் பூமியை
வாழ வைப்பதேனோ?
இது தான் உன் குணமோ?
பெண்ணே
எட்டுத் திக்கும் முழங்கிட
உன் பார்வையில் ஒளி தெறிக்க
அடக்கு முறையை கைக்குள்
அடக்க
தென்றலாய் அலையாய்
சுகந்தத்தின் பெண்ணியமாய்
மீண்டு வா நீ
மீண்டும் வா
உன் வருகைக்காகக் காத்திருப்பது
என் பேனாமுனையும்
இப்பூமியும் தான்

* * *

## மீண்டும் வருவோம் - 2

**பி.பிறேமிஷா,** தரம் $13M_2$

மீண்டு வருவதற்கு மீண்டும் முயற்சிக்கிறேன்
மீள வருகிறது அந்த மீளாத் துயர் நினைவு
மீண்டும் துடிக்கிறது மனது மீளவும் துயர் சூழ்ந்தால்
மீளத் தவிக்கிறது இத்துயரிலிருந்து மீண்டு வர.

தத்தி நடை பயின்று தவறி விழுந்த என்மணணே
பொத்தி வைத்த எம் செல்வங்களை – அன்று
கத்தும் கடலினுக்கே இரையாக்கிவிட்டு வந்தோம்

எத்திப் பிழைத்தேனும் எம் உயிரைக் காக்கவென.

ஆவேசம்கொண்டு நின்ற ஆக்கிரமிப்பாளர்களின்
துவம்சச் செயல்களினால் பறிகொடுத்தோம் பல்லுயிரை
நிசப்தம் கலைந்ததே எம் மண்ணின் வளமும் கருகியதே
நிஜங்களும் நிழல்களாய் மாறியதே இமைப் பொழுதில்

செந்தணலில் கருகி விழும் உயிர்களையும்
செங்குருதி வெள்ளத்தில் மிதந்து திரியும் பிணங்களும்
செத்தாலும் வலி அது சிறுகணமே - நாம் கண்ணுற்ற
செருக்களத்தின் கோரக்காட்சிகளால் அனுதினமும் இறப்பே.

நெஞ்சில் உரமோடு செருக்களம் புகுந்த வீரர்கள்
நெஞ்சு பிளந்து மாமரணம் எய்துகையில்
அஞ்சி வாழ்ந்தவர்கள் கூடப் பிணக்குவியல்களில்
நெஞ்சில் குருதியோடு குவித்த காட்சிகளை மறப்பது தான் சாத்தியமோ?

வல்லரசாய்ப் பெருமை சேர்த்த பெரும் நாடுகளும்
வல்வினைகள் பல நிகழ்த்தும் எம் மண்ணைக்காக்க
வலிமையற்று வாழாவிருந்தனரே அது கொடுமை
வல்லமையற்று மடிந்தது எம் உறவுகள் என்பதே வாய்மை.

அன்னையை இழந்த மண்ணை அரவணைப்பானா தனயன்
கணவனைப் பறித்த மண்ணை காதலிப்பாளா துணைவி
உறவுகளைப் பலிகொடுத்த பின்பு அவ் விடத்தில் அவர்கள்
நினைவுகள் எமை வதைக்கும் என்று மனம் ஏங்குவது நிஜமே

வந்தோரை வாழவைக்கும் வன்னியென்ற நாமம் இன்று
வன்னியின் வம்சாவளிகள் கூட வரமறுக்கும் துயரத்தை
வகைவகையாய் எம் சந்ததியற்கும் படர விடுவோமா? - இல்லை
வாழ்வின் அத்திவாரம் நாட்டப்பட்டதைத் தான் மறுப்போமா?

இலைகள் ஒடிந்து நீரடித்து திசை மாற்றினாலும்
இலையின் பிறப்பதனை விழுதுகள் உள்ளவரை மரம் சாட்சியாகுமா?

சந்ததிகள் தம் சொந்த மண்ணை மறக்கும் வகை செய்வோமா?
இல்லை எம் சந்ததிகள் புத்துயிர்க்க வழிதான் சமைப்போமா?

காலத்தின் சுழற்சியதில் ஆறிவிடும் ஆழ்மனம்
காலம் தான் ஆற்ற வேண்டும் இறந்த காலப் பதிவுகளை
காலச்சக்கரம் தன் சுழற்சியை நிறுத்தவில்லை – நாம்
காலத்தின் போக்கில் மாற்ற வேண்டும் எம்மனப் பயத்தை
வேதனைகள் இல்லாத வாழ்வொன்றும் உண்டா
வேதங்கள் கூட கூறிடுமே வேதனை தான் வாழ்க்கையென்று
வேகமாய் துளிர்க்க வேண்டும்.. வாழ்வு முடியவில்லை
விவேகமாய் சிந்தி.. உன் சந்ததி சிறக்க வேண்டும்

மீண்டு(ம்) வருவோம் எம் வேதனைகள் தகர்த்தெறிந்து
மீட்டுக் கொடுப்போம் உயர்வுகளை எம் மண்ணிற்கு
மீண்டு(ம்) வரச் செய்வோம் மீதி எம் உறவுகளை
மீட்டு எடுத்திடுவோம் உயர்வாக எம் தாய் மண்ணை.

PERMANENT REFERENCE
J/Chavakachcheri Hindu College

* * *

## மீண்டும் வருவோம் - 3

**வி.கௌதமி,** தரம் : $12^{B}$

காலையிலே சேவல் கூவிட
கண் விழித்தெழுகின்றோம் நாம் எல்லாம்
பறவைகள் இரை தேடச் செல்கின்றன.
பள்ளி செல்ல நாமும் ஆயத்தமாவோம் நிதமும்.

கதிரவனின் வருகையைத் தொடர்ந்து
காலைக் காட்சியும் அழகாக உருவாகின்றது
ஒவ்வொருவரும் தத்தம் தொழிலுக்கு
ஒவ்வொரு விடியலையும் தேடிச் செல்கின்றார்கள்.

பட்டு உடுத்தி வரவில்லை நாம் பள்ளிக்கு

படிக்க என வெள்ளை உடுத்தி வருகின்றோம் நிதமும்.
பாடங்கள் ஒன்றையும் தவறவிடாமல் கற்று
பள்ளி ஆசிரியருக்கு விசுவாசமாக நடந்து கொள்கின்றோம்

எவ்வளவு அழகான நாட்கள் இவை
எண்ணி எண்ணி மகிழ்வுறலாம் எப்போதும் பள்ளிக் காலத்தை
எனினும் ஒன்றிலிருந்து பதின்மூன்றாம் வகுப்பு வரை கற்று முடித்து
எதிர்காலத்தை ஒளிமயமாக மாற்றப்போகும் நாமோ
பள்ளிக் காலத்தின் இறுதி விளிம்பில்....

விளையாட்டு கலை நிகழ்வுகள், வினாடி வினாப் போட்டிகள் என
விதம் விதமான சந்தர்ப்பங்கள் எல்லாம் கிடைக்கின்றன
அன்புடனே ஒழுக்கம், பண்பாடுடன் கூடிய கல்வியை
அளிக்கின்றார்கள் ஆசான்கள்...

பாடத்தில் விளங்கவில்லை என
பாட ஆசிரியரிடம் கூறவே தேவையில்லை
எம்முடைய முக பாவனையிலேயே எல்லாவற்றையும் புரிந்து
எத்தனை முறை வேண்டுமானாலும் கற்பிக்க ஆயத்தமாக இருக்கின்றனர்.

வீட்டு வேலை செய்யவில்லையென
வீட்டில் பெற்றோருக்கும் தெரியப்படுத்தி
வகுப்பின் வாயிலில் மாணவர்களை
வரிசை வரிசையாக நிற்க விடுவதும் எதற்காக....
வசந்தமானதும் ஒளிமயமானதுமான விடியலுக்குத் தானே...

ஆசான் தவறு மாணவர் விடும் போது
ஆக்ரோஷத்தோடு வந்து தட்டிக் கேட்பர்
அப்போது எல்லாம் பொத் எனக் கோவம் வரும் எமக்கு
அது எல்லாம் ஆசிரிய தொழிலின் மகத்துவம் என்பது
அந்த வேளையில் எமக்குப் புரிவதில்லை....

நித்தமும், நிதானமாகக் கல்வி கற்று

நித்திரையையும், உறவுகளையும் தவிர்த்து
தோல்வி ஒவ்வொன்றையும் வெற்றிப் படியாக கருதச் சொல்லும் ஆசான்கள்
தோன்றியிருக்கும் இறைவனின் மறு உருவங்கள் என்றே
தோன்றுகின்றது எங்கள் மனதில் ....

எது எவ்வாறாயினும் இருக்கட்டும்
எம்மைச் சிறப்புடனே வளர்த்து விட்ட பள்ளித்தாயிடம்
பல்கலை முடித்த பின்னர் மட்டுமல்ல வாழ்வின் இறுதிக் காலத்திலும்
பாசத்துடனே மீண்டும் வருவோம்....
பள்ளித்தாயே! நீ எத்தனை எத்தனையோ குழந்தைகளை
ஆண்டுதோறும் பிரசவிக்கின்றாய்....
ஆயிரம் குழந்தைகளும் ஒரே நேரம் வராவிட்டாலும்
ஆசையுடன் மீண்டும் வருவோம்...
உன்பாலை அருந்துவதற்காக ....

* * *

# பிடித்த நூலும் சுவைத்த பகுதியும் - 1

பி.லக்ஷிகா, 11

திருக்குறள் என்பது அனைவருக்கும் முழுமையும் புதிதன்று. புராதன காலத்தில் இருந்து போற்றிப் பேணப்பட்டு காலம் காலமாக கையளிக்கப்பட்ட ஒரு அளவிடமுடியாத பொக்கிசமே திருக்குறள். அன்று வாழ்ந்த பொய்யா மொழிப் புலவர் எனப்படும் திருவள்ளுவர் இந்த உலகிற்கு விட்டுச் சென்ற அற நெறியின் திறவுகோலாகவே நாம் திருக்குறளைக் கருதலாம்.

அந்த வகையில் திருவள்ளுவர் தன்னுடைய திருக்குறளிலே வாழ்வியலுக்குத் தேவையான அருங்கருத்துக்களைக் கூறிச் சென்றுள்ளார். அவர் தன்னுடைய நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களுள் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒவ்வொரு அறக்கருத்தைக் கூற முயன்றுள்ளார். வள்ளுவர் எமக்களித்த அறநெறிகள் ஒழுக்கம், கல்வி, பணிவு, நீத்தார் பெருமை, நன்றிமறவாமை, கடவுள் வாழ்த்து, ஊக்கமுடைமை என நீண்டு கொண்டே செல்கின்றது.

ஒழுக்கம் உடைமை எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் பல ஒழுக்கப் பண்புகளை மக்களுக்கு எடுத்தியம்ப விளைகின்றார். ஒழுக்கத்தினை திருவள்ளுவர் உயிரினும் மேலானதாகவே கருதுகின்றார். அதனை வள்ளுவர் தனது குறட்பாவிலே

"ஒழுக்கம் விழுப்பம் தலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறாக ஒழுக்கம் மனித வாழ்விற்கு எந்த அளவுக்கு முக்கியமானது என்பதையும் ஒழுக்கத்தினைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் நன்மைகளையும் தன்னுடைய ஒவ்வொரு குறட் பாவிலும் வள்ளுவர் வலியுறுத்தி நிற்கின்றார். அதைவிட ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பவர் நீடுவாழ்வார்கள் என்பதையும் தன்னுடைய குறளிலே குறிப்பிட்டு விளக்கியுள்ளார். அதனை வள்ளுவர்

"ஒழுக்கம் இல்லான் கண் உயர்வில்லை" என்னும் குறளடியி னூடாக எடுத்தியம்புகிறார்.

கல்வி, வள்ளுவர் வலியுறுத்திய மற்றுமொரு களம். கல்வி என்றவுடன் வள்ளுவர் கல்வி கற்பதனாலேயே ஒருவன் ஒழுக்க பண்புள்ளவனாகின்றான் என்கிறார். கல்வி கற்பதனாலேயே மனிதனானவன் உயர் நிலைக்குச் செல்கின்றான். கல்வியே ஒரு மனிதனை விலங்கிலிருந்து வேறு படுத்திக் காட்டுவதாகவும் கல்வி கற்காதவன் விலங்குப் பண்புகளைக் கொண்டவன் எனவும் குறிப்பிடுகின்றார். அதனை

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்

கற்றாரோடு ஏனையவர்"

எனத் தனது குறட்பாவினூடாக வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

பல ஒழுக்கப் பண்புகளை கூறிய வள்ளுவர் நன்றிமறவாமைப் பற்றியும் கூறத் தவறவில்லை. அவர் தன்னுடைய நன்றி மறவாமை எனும் அதிகாரத்தில் அதனை விரிவாகவே விளக்கிக் கூறியுள்ளார். நன்றிமறவாமை என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் மிக முக்கியமான ஒன்று. வள்ளுவர், ஒருவர் செய்த உதவிக்கு நாம் எப்போது கடமைப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறுகிறார். அதனை வள்ளுவர் தன்னுடைய குறட்பாவிலே வலியுறுத்திக் கூறுகின்றார்.

அதனை விட உதவி செய்யும் மனப்பாங்கையும் வள்ளுவர் தன்னுடைய திருக்குறளினூடாக விளக்க முற்படுகினறார். ஒவ்வொருவரும் ஒவ்வொருவரையும் மதித்துச் செயற்பட வேண்டும் என்றும் ஒருவருக்கு துன்பம் வரும் வேளையில் அவர் துன்பத்தை நம் துன்பமாகக் கருதி அவருக்கு உதவ வேண்டும் என்றும் திருக்குறள் வலியுறுத்துகிறது. அதனை வள்ளுவர் தன்னுடைய குறட்பாவிலே

"அறிவானால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்

தம் நோய் போல் போற்றக் கடை"

எனக் குறிப்பிடுகின்றார்.

இவை அனைத்திற்கும் மேலாக திருக்குறள் விருந்தோம்பல் பண்பினையும் முக்கியத்துவப்படுத்திக் கூறுகின்றது. விருந்தோம்பல் என்பது மனிதனானவன் பின்பற்ற வேண்டிய முக்கிய அறநெறி ஆகும். ஒருவர் பசி என்று வரும் போது அவனுக்கு ஒரு பிடி உணவென்றாலும் மலர்ந்த முகத்தோடு அளிக்க வேண்டும். அதைத் தவிர்த்து வயிறு நிறைய உணவை வேண்டா வெறுப்பாகக் கொடுக்கக் கூடாது எனத் திருக்குறள் வலியுறுத்துகின்றது.

இவற்றை விட திருக்குறள் அறத்தின் மேன்மையையும் அறவாழ்வின் முக்கியத்துவத்தையும் உணர்த்தி நிற்கின்றது. அந்தவகையில் வள்ளுவர்

"அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
பிற ஆழி நீந்தல் அரிது"

எனக் குறிப்பிடுவதன் மூலம் அறத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுகின்றார்.

'மனிதனானவன் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய முக்கியமான பண்பான சொலில் நல்லவற்றை சொல்லல் என்பதை வள்ளுவர் தன்னுடைய பயனில சொல்லாமை எனும் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில் நாம் ஒருபோதும் மறந்தும் கூட பயனற்ற சொற்களைச் சொல்லக் கூடாது என குறிப்பிடுகின்றது திருக்குறள். அதனை

"பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள் தீர்ந்த
மாசறு காட்சியவர்"

எனும் குறட்பாவினூடாக நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

இவ்வாறாக திருக்குறள் பல அறநெறி தொடர்பான அறக்கருத்துக்களை மிகவும் ஆணித்தரமாக முன்வைக்கிறது. திருக்குறளினை இயற்றிய வள்ளுவர் தான் வாழ்ந்து பின்பற்றி பயன்பெற்ற பல விடயங்களையே மக்களுக்கு அள்ளித் தந்துள்ளார். இத்திருக்குறளின் மேன்மை நிலை காரணமாக அது பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பல நாடுகளிலும் பயின்று பின்பற்றப்பட்டு வருகின்றது.

எது எவ்வாறு இருந்தாலும் திருக்குறளினைப் படித்து அதன் வழியினைப் பின்பற்றி நடப்பவர்கள் மிகச் சிலரே அவர்கள் திருக்குறளைப் படிக்கிறார்கள். ஆனால் அதில் கூறப்பட்டுள்ள அற நெறியைப் பின்பற்றுவது இல்லை. திருக்குறள் திருவள்ளவர் பின்பற்றி ஒழுகிய கல்முள் அற்ற ஒற்றையடிப் பாதை நாமும் அவ்வழியைப் பின்பற்றி ஒழுகி வாழ்வில் வெற்றி பொறுவோமாக.

* * *

# பிடித்த நூலும் சுவைத்த பகுதியும் - 2

ஜெ.ஜெயமதுரா. 7D

பாரத நாட்டின் பதினொராவது குடியரசு ஜனாதிபதியாக இருந்தவர் தான் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் ஆவார். இவரின் சுயசரிதைதனை விளக்கும் முகமாக அப்துல் கலாமின் தலைமையில் பத்து வருடஙகளுக்கு மேலாக பணியாற்றிய அருண்திவாரி என்பவர் "அக்கினிச்சிறகுகள்" எனும் நூலை எழுதினார். காதினிக்கக் கவிதைகள் இதில் பொதிந்துள்ளதையும் வேதனைகள் பல இவரைச் சூழ்ந்திருந்ததையும் கிடைத்தற்கரிய இந்நூல் மூலம் அறிந்து கொண்டேன்.

அதில் எனக்குக் கிடைத்த அரும்பொக்கிசமாக அமைந்தது யாதெனில் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் உணர்ந்து எழுதிய "என் அன்னை" என்னும் இன் கவிதையாகும். ஒரு மனிதன் தன்னை எவ்வளவுக்கு அதிகமாக நேசிக்கிறானோ, அதைவிட அவனது அன்னையை மிகவும் நேசிப்பான். அதற்கு எடுத்துக்காட்டாக கலாம் அவர்கள் விளங்குகின்றார். அவ்வாறு இவரைக் கூறுவதற்கு பல காரணங்கள் உண்டு. ஏனெனில் அவர் தன் கைப்பட எழுதிய கவிதை தன்னில் தன் தாயைப் பல அற்புத வடிவங்களில் விளக்கியுள்ளார்.

"கடல் அலைகள்,பொன் மணல்,
புனித யாத்ரிகர்களின் நம்பிக்கை,
இராமேஸ்வரம் பள்ளிவாசல் தெரு
இவையெல்லாம் ஒன்று கலந்த உருவம் நீ,
என் அன்னையே." என்றுரைத்தார். கடல் அலைகள் என்று இவர் குறிப்பிட்டதற்கான காரணம் யாதெனின் இவரின் தாய் தமக்காக என்றும் உழைத்திடுவர் என்பதைக் குறிக்கவே.

அடுத்த பகுதியாய் அமைந்தவை,

"சுவர்க்கத்தின் ஆதரவுக்கரங்களாய்
எனக்கு நீ வாய்த்தாய்
போர்க்கால நாட்கள் என் நினைவிற்கு வருகின்றன.
வாழ்க்கை ஒரு அறைகூவலாய் அமைந்த கொந்தளிப்பான காலம் அது."

காலத்தின் கட்டாயத்தினையும் எவ்வளவு இனிமையாகத் தாயிடம் எடுத்துரைக்கின்றார் பார்த்தீர்களா? இக்கவிதை முற்றுகையில் என் இதயம் என்னிடமே இல்லையென்றாகிவிட்டது. அவ்வரிகள் யாதெனில்,

"என் அன்னையே
நாம் மீண்டும் சந்திப்போம்
அந்த மாபெரும் நியாயத் தீர்ப்பு நாளில்"

ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் அவர்களை மெச்சுவதோடன்றி அவரின் கவிகளுக்கு நான் தலை வணங்குகின்றேன்.

* * *

## பிடித்த நூலும் சுவைத்த பகுதியும் - 3

க.யதுஷா - $7^E$

நமக்கு மிகவும் இனிதான அரிய கருத்துக்களைக் கூறும் திருக்குறளே எனக்கு மிகவும் பிடித்த நூலாகும். இது பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு உலகத்தில் இருக்கும் அனைத்து மக்களும் பயன்படுத்தும் ஒரு நூலாகும். இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களையும் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும் கொண்டு காணப்படுகின்றது. சிறுகக் கூறி பெருகப் பொருள் தரும் நூல் திருக்குறளாகும். உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறளின் அருமை பெருமைகளை உணர்ந்த மக்கள் இதனை ஒரு தெய்வீக நூலாகக் கருதினர். இதில் வரும் ஒவ்வொரு குறட்பாவும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

அதில் முதலாம் அதிகாரத்தில் வரும் கடவுளை உயர்ந்த விதத்தில் குறிப்பிடப்படும் கடவுள் வாழ்த்து பல அரிய கருத்துக்களைக் கூறுகின்றது. கற்றலின் சிறப்பைக் கல்வி கல்லாமையிலும் மழையின் சிறப்பைப் பற்றி வான் சிறப்பிலும் நன்னடத்தையைப் பற்றி ஒழுக்கம் உடமையிலும் கூறப்படுகின்றது.

அதிலும் உதாரணமாக "ஒழுக்கம் விழும்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது நன்னடத்தைக்கு பெருமை தருவதால் அதை உயிரிலும் மேலாகக் கருதப்படும் என்பதைக் குறிப்பிடுகின்றார். "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்பதில் பிழையின்றி எதையும் கற்க வேண்டும்,கற்றபடி வாழவேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

இது மக்களுக்கு அரிய தத்துவங்களைக் கூறும் ஒரு திருநூலாகும். மக்களின் மனதில் பலநற்குணங்களைப் புகுத்தும் ஒரு நூலாகும். தமிழ் வளர்ச்சியில் தனது அளவில்லா பெருமைகளைக் கூறுகிறது. இரண்டே வரிகளில் நன்நெறிகளைக் கூறும் இதைவிட வேறெந்த நூல்களும் இருக்காது. உலகின் இருக்கும் பல்மொழி மக்களும் பயன்படுத்தும் ஒரு நூல் இதுவாகும்.

மாணவர்கள் மனதில் சிந்திக்கத்தக்க பல விடயங்களை இக்குறள்களிலே புகுத்தி இருக்கின்றார். இதைப்படிப்பதால் எந்தக் கெட்ட மனிதனும் தனது தீய செயலைப் புதைத்து நல்லெண்ணத்தை மலர விடுவான். இது இரண்டே வரிகளில் தனது தமிழின் மகிமையை உணர்த்துகின்றது.

திருக்குறளைப் படிப்பவர்கள் ஒரு சிறந்த பூரண மனிதனாக விளங்குகின்றனர். பண்டிதர் முதல் பாமரர் வரை படித்து பயன்படுத்தும் வகையில் எளிய தமிழ் நடையில் காணப்படுகின்றது. எனவே இன்றிலிருந்து திருக்குறளைப் படித்து தமிழ்ச் சமுதாயத்தில் ஒரு வழிகாட்டியாக விளங்குவோம்.

* * *

# என் தாயும் தமிழ் மொழியும்

சோபனா – $11^{D}$

அறியாமை என்னும் இருளை அகற்றி அறிவை அளிக்கும் தீபிகை எம் தமிழ்மொழியாகும். தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்று பொருள். இவ்வுலகில் உள்ள அனைத்து மொழிகளையும் விட இது திருந்திய இலக்கண அமைதியையும், இனிமையையும் கொண்டுள்ளது. இவ் இன்பத்தமிழ் என் இனிய தாய்எனக்குப் பரிசளித்த விரிதாமம் என்றே கூறுவேன்.

பத்துத் திங்கள் தன் கருவறையில் பங்குவமாய் என்னைக் காத்த என் தாய் எனக்கு உணவுடன் பைந்தமிழையும் ஊட்டி வளர்த்தாள். என் தாயின் இரக்க குணம், பரிவு, மென்மை, அன்பு, அழகு ஆகியவற்றைக் கொண்டுதான் போலும் தமிழை ஆணாக உருவகிக்காமல் அன்னையாக உருவகித்துள்ளனர். என் பார்வையில் எனக்கு உயிர் கொடுத்த என் அன்னையும் அறிவு கொடுத்த என் தமிழ் அன்னையும் ஒப்பாகவே தெரிகின்றனர்.

திருநீற்றால் நெற்றியும், நெய்யால் உணவும், ஆறால் ஊரும், உடன் பிறப்பால் இவ் உடம்பும், மனைவியால் வீடும், மாண்படைவதைப் போன்று தன் பிள்ளையால் தான் ஒரு தாய் பெருமையடைவாள். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது பழமொழி தன் பிள்ளை என்ன நிறம், உயரம் என்று எல்லாம் ஓர் அன்னை எண்ண மாட்டாள். அவள் மனதில் இவன் என் பிள்ளை என்ற எண்ணம் மட்டுமே இருக்கும். எம் தமிழ் அன்னையும் இவர் யார்? என்ன குலம்? என்ன நிறம்?, என்று பார்த்தா இலக்கியப் படைப்புக்களை அங்கீகரிக்கிறாள்?

நண்டு, சிப்பி, மூங்கில், வாழை ஆகிய நான்கும் தாம் இவ்வுலகை விட்டு நீங்கும் காலத்தில் ஓர் அளப்பரிய பொக்கிஷத்தை உலகுக்கு அளித்து விட்டுச் செல்வதைப் போன்று எம் தமிழப் புலவர்கள் எமக்கு இலக்கியங்கள் என்ற பொக்கிஷங்களைத் தந்து விட்டுச் சென்றுள்ளனர். அவை இன்று எம் தமிழ் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடிகளாக விளங்குகின்றன. என் தாய் எனக்கு அறிவுக் கருவூலமான தமிழையே எனக்குப் பரிசாக அளித்துள்ளாள். கறவைப் பசு தன்னிடம் உள்ள பாலைப் பிறருக்கு ஒழிக்காமல் கொடுப்பதைப் போல என் அன்னை தன் அன்பையும் பாசத்தையும்

எனக்கு அள்ளி அள்ளிக் கொடுத்துள்ளாள். என் அம்மா என் பசியின் போது என் அன்பு கலந்த உணவை ஊட்டுவதைப் போன்று என் தமிழ் அன்னை என் அறிவுப் பசிக்கு தன் இலக்கியங்களை ஊட்டி என் பசியைப் போக்குகின்றாள். என் அன்னைக்கும் தமிழ் அன்னைக்கும் பல ஒற்றுமைகளை இவ்வாறே அடுக்கிக் கொண்டே போகலாம்.

என் அன்னை என் தவறுகளைத் திருத்தும் போது என்னுடன் வன்மையாகவும் என் மீது அன்பைப் பொழியும் போது மென்மையாகவும் பிறர் முன்னிலையில் என்னுடன் இடைத்தன்மையுடனும் நடந்து கொள்வதால் தான் தமிழ் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவற்றிலிருந்து த,மி, ழ் ஆகிய எழுத்துக்களைக் கொய்து 'தமிழ்' என்று தமிழ் அன்னைக்குப் பெயர் சூட்டினார்கள் போலும். தமிழ் அன்னை இயல் இசை நாடகம் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளைத் தன் பிள்ளைகளுக்கு வழங்குவதற்காகத் தன்னகத்தே கொண்டுள்ளதைப் போல என் அன்னை என் படிப்புக்கு உதவ அறிவையும் என்னைத் தூங்க வைக்கத் தாலாட்டையும் எனக்கு மகிழ்ச்சியூட்ட விளையாட்டையும் தன்னகத்தே கொண்டுள்ளாள்.

ஓர் தாய் தன் குழந்தை வளர்ந்த பிறகு பேசும் திருந்திய சொற்களை விட பொருளற்ற மழலை பேசும் போது தான் அதிகம் மகிழ்கின்றாள். நாட்டார் இலக்கியங்கள் பெரும்பாலும் அனைவராலும் விரும்பப் படுவதற்கு காரணம் இதுவும் ஒன்றாகும் என என் மனம் எண்ணுகின்றது. "சந்தனமென் குறடு தான் தேய்ந்த காலத்தும் கந்தம் குறைவு படாது" என்பது ஔவையின் வாக்கு ஆகும். ஓர் தாய் தன்னை வருத்தி தன் பிள்ளைக்குச் செய்யும் செயல்கள் யாவும் அவள் பிள்ளை மனதில் அவளை ஓர் தெய்வமாக மிளிர வைக்கிறது. அவள் இறந்த பிறகும் அந்தத் தாய் தன் பிள்ளை மனதில் சந்தனமாக சுகந்தம் வீசிக் கொண்டிருப்பாள்.

தாய்மையின் சிறப்புக்கள் மிகத் தொன்மையான எம் தமிழ் மொழியில் பல இடங்களில் சுட்டிக் காட்டப்படுகின்றன. உதாரணமாக அரிச்சந்திர புராணம் இராமாயணம், மகாபாரதம் ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம். இங்கு அன்னையின் அன்பு அளவின்றிக் காட்டப்படுகின்றது. உதாரணமாக அரிச்சந்திர புராணத்தில்,

"கண்டனன் கதறி வீழ்ந்தாள் கழுகெல்லாம் இரியல் போக
கொண்டதோர் மகவின் ஆசை ஆவியைக் கொள்ளை கொள்ள
முண்டகக் கரத்தால் ஏந்தி முருகனை மடிமேல் வைத்து
அண்டரும் மறுகி ஏங்க வாய்திறந்தரற்றலுற்றாள்"

என்னும் பாடல் மூலம் மகனை இழந்த ஓர் தாயின் நிலை சித்திரிக்கப்படுகின்றது. இங்கு அனைத்துத் தேவர்களும் அவள் கதறலைக் கண்டு ஏங்குகின்றனர் என்பதில் இருந்து அவள் அன்பின் ஆழம் புலனாகின்றது. தன் உதிரத்தைப் பாலக்கிக் கொடுத்துச் சீராட்டி மார்மீதும் தோள்மீதும் போட்டு வளர்த்த தன் மகன் இன்று உயிரற்ற உடலாய்க் கிடப்பதைப் பார்த்து உலகில் எந்தத் தாய் தான் பதறாமல் இருப்பாள். இதே நிலை இராமாயணத்தில் மண்டோதரிக்கும் வருகின்றது. அவளது துன்பத்தைச் சொல்ல கம்பனாலேயே முடியவில்லை. இறுதியில் உயிரிழந்த மயிலுக்கு மண்டோதரியை உவமிக்கின்றார்.

"கொலையின் மேல் குறித்த வேடன்
கூர்ங்கணை உயிரைக் கொள்ள
மலையின் மேல் மயில் வீழ்ந்தென்ன
மைந்தன் மேல் மறுகி வீழ்ந்தாள்"

"ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல்" என்கிறது நான்மணிக் கடிகை "மருவி இனிய சுற்றம் வான்பொருள், நல்ல உருவம், உயர் குலம் ஆகிய அனைத்தும் இலட்சுமி எம்முடன் இருந்தால் மட்டுமே கைகூடும் என்பார்கள். ஆனால் இவை அனைத்தும் எம் அன்னை எம்முடன் இருந்தால் மட்டுமே கைகூடும் என்பது என் கருத்தாகும். எம் அன்னை பற்றி மாபெரும் தமிழப் புலவர் அபூபக்கர் நுதலியதாவது,

"மானுடம் அடைந்து நிற்கும் மாதவ பேற்றினுள்ளே
வானூறு போலும் ஒன்று வையகத்துண்டே யாயின்
தான்னெனும் நிலை கடந்த தாய்மையே என்று சொல்வேன்"

ஓர் பெண் அவள் தாயாகும் போதே முழுமையடைவதைப் போன்று உலகால் பாராட்டப்படும் பல்வேறு படைப்புக்கள் எம் தமிழில் படைக்கப்படும் போதே எம் தமிழ் அன்னை முழுமையடைகின்றாள். இருமையைப் படைத்து ஆழும்

இறைவனுக்கு அடுத்த சக்தி என் தமிழும் அதனை எனக்கு அளித்த என் தாயும் ஆவர். காலம் என்னும் ஆழியிலும் காற்று மழை ஊழியிலும் அளியாத புகழுடன் நிலைத்து நிற்கும் என் தாய் செருப்பாக அடுத்த ஜென்மத்தில் பிறக்க விரும்புகின்றேன். அவள் காலில் மிதிபட அல்ல. என்னைச் சுமந்த அவளை ஒரு கணமேனும் சுமந்து பார்க்க.

* * *

# காலங்கள் காத்திருக்காது - 1

வ.கிரியாழினி – 10F

எங்கோ சேவல் ஒன்று செட்டை அடித்துக் கூவியது. மெல்லக் கண்விழித்துப் பார்த்தாள் சாந்தி. அந்த ஓலைக்குடிசைக்கு வெளியே தெரிந்த விண்மீன்களைக் கொண்டு நேரம் நான்கு மணி இருக்கும் எனத் தீர்மானித்தபடி தன் தாயைப் பார்த்தாள். அயல் வீடுகளிற்கு வேலைக்குச் செல்வதற்காக அவசர அவசரமாகச் சமையல் செய்து கொண்டிருந்தாள் அவளது தாய் கற்பகம். நோயால் மெலிந்து போன உடலும் இருந்தும் மிக வேகமாக சமையல் செய்து கொண்டிருக்கும் அவளது தாயின் மன உறுதியையும் கண்ட சாந்தியின் மனது பழைய கால நினைவுகளில் மூழ்கியது.

சாந்தி பிறந்த போதுான் அவளது தந்தைக்கு புற்றுநோய் எனும் கொடிய வியாதி கண்டறியப்பட்டது என அவளது தாய் கூறக் கேட்டதுண்டு. சாந்தி பிறந்து இரண்டு வயது முடிந்தவுடனே அவளது தந்தை இறைவனடி சேர்ந்து விட்டார் எனவும் அவளது அம்மா கூறியது உண்டு. சாந்திக்கும் அந்த அரண்மனை வீட்டில் அவளது தந்தையின் கையில் தவழ்ந்து விளையாடிய ஞாபகம் உண்டு. ஆனால் அதன் பிறகு எல்லாம் அந்தக் குடிசைவீடும் முற்றத்தில் உள்ள நித்தியகல்யாணி மலரச்செடியும் வேலை செய்து ஓய்ந்து போன அவளது தாயின் உடம்பும் தான் அவளது கண்களுக்கு பழக்கப்பட்டவை ஆகின.

“பிள்ளை சாந்தி எழும்பிப் படிமோன நேரம் நாலு மணி இருக்கும்” என்ற தாயின் குரல் கேட்டு சுயனினைவடைந்தவள், “இதோ அம்மா” என்றவாறு பாயைச் சுருட்டி விட்டு இதோ அணைகிறேன் எனும் நிலையில் ஒளிவீசிக் கொண்டிருந்த அந்தக் கை விளக்கின் அருகில் அமர்ந்து தான் ஒரு மருத்துவராக வேண்டும் என்ற இலட்சியத்தை அடையும் உத்வேகத்துடன் படிக்கத் தொடங்கினாள்.

இப்படியாக சில மாதங்கள் சென்றன் ஒரு நாள் அம்மா கட்டிவைத்த சாப்பாட்டுப் பார்சலையும் புத்தகப்பையையும் எடுத்துக் கொண்டு பாடசாலைக்குச் சென்றாள் சாந்தி. இடைவேளை நேரம் அலுவலகத்தில் இருந்து சாந்திக்கு

அழைப்பு வந்தது. சென்று என்ன என்று கேட்கையில் "உம் அம்மா சாவகச்சேரி கொஸ்பிற்றல்லையாம் உம்மள வரட்டாம்" என்றார். உடனே பதறித்துடித்தவாறு தன் தாயைக் காண ஓடிச் சென்றாள். மருத்துவர்கள் சூழ நின்ற தாயைப் பார்த்தாள். ஒருமருத்துவர் "உங்கட அம்மா இண்டைக்கு வேலை செய்கிற இடத்தில மயங்கி விழுந்திட்டாராம், எண்டு சொல்லி அந்த வீட்டுக்காரி ஓராள் இங்க கொண்டந்து விட்டவா" என்று கூறினார்.

அவள் தனிமையில் இருக்கையில் ஒரு மருத்துவரிடம் சென்று "என் அம்மாக்கு என்ன டாக்டர், எதுவாய் இருந்தாலும் சொல்லுங்கோ?" என்று கெஞ்சினாள். அந்த மருத்துவரும் உங்கள் அம்மாவிற்குப் புற்று நோய் என்று கூறினார். இதைக்கேட்டுத் திடுக்கிட்டாள். இந்த உலகமே இருண்டு விட்டது போன்று உணர்ந்தாள். "என் அப்பாவையும் இக்கொடிய நோயினால் பறிகொடுத்துட்டன் கடவுளே! என் அம்மாவையும் என்னைவிட்டு பிரித்துவிடாதே" என்று பிரார்த்தித்தாள்.

தான் ஒரு மருத்துவராக வரவேண்டும என் அம்மாவின் நோயை மாற்ற வேண்டும் என்ற உத்வேகம் அவளுள் ஏற்பட்டது. மிகவும் நன்றாகப் படிக்கத் தொடங்கினாள். காலங்கள் உருண்டோடின. சாதாரண தரத்தில் உயர் சித்தி பெற்றாள். உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்றாள் உயர் சித்தி அடைந்து களனி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானாள். தன் தாயை விட்டு பிரிந்து செல்ல நேர்ந்ததே என்று மனம் வருந்திய போதும் தன் தாயின் நோயை மாற்ற வேண்டும் என்பதற்காகப் பல்கலைக்கழகம் சென்றாள்.

சில வருடங்களுக்குப் பின் ஒரு மருத்துவராக வெளிவந்தாள். தன் கிராமத்தை நோக்கிச் சென்றாள். அங்கு அவள் கண்ட காட்சி அவளை திகைக்க வைத்தது. அவள் வாழ்ந்த குடிசை பாழடைந்து காணப்பட்டது. தன் தாய் எங்கே என்று அயலவரிடம் கேட்டபோது இறந்து விட்டதாகக் கூறினர். அவளது கனவெல்லாம் காற்றோடு போயின. அந்த இடத்திலே மயக்கமுற்று விழுந்தாள். காலங்கள் யாருக்காகவும் காத்திருக்காது. அது இவளுக்காகவும் காத்திருக்காமல் அவளது தாயின் உயிரை எடுத்துச் சென்றுவிட்டது.

* * *

# காலங்கள் காத்திருக்காது - 2

இ.மதுசா – 11D

"ஏய் சுதன்! இண்டைக்கு உனக்கு விடுதலை. என்ன, ஞாபகமில்லையா? ஐயா வரட்டாம் உடன வா!"

பதினான்கு வருட கால ஓட்டத்தின் பின் இன்று வெளியுலகை காணப்போகின்றான் சுதன். சுதன் அமைதியான கிராமத்தில் ஓர் அழகான குடும்பத்தில் பிறந்தவன். வீட்டிற்கு மூத்த பிள்ளை. இவனிற்குப் பின் மூன்று தங்கைகளும் ஒரு தம்பியும் அடுத்தடுத்துப் பிறந்தனர். சுதனுடைய அப்பா தோட்ட வேலை செய்தே ஐந்து பிள்ளைகளையும் வளர்த்தார். சிறு வயதிலேயே குடும்பப் பொறுப்பை உணர்ந்தவன் தான் சுதன். ஏனைய கிராமத்துச் சிறுவர்கள் போலின்றி கல்வியின் மகத்துவத்தை அறிந்தவன் சுதன். சிறுவயதிலிருந்தே தான் நன்றாகக் கல்வி கற்று லண்டன் பல்கலைக்கழகத்தில் உயர் படிப்பை தொடர்து சமூகத்தில் நல்ல நிலைக்கு வரவேண்டுமென்பதே சுதனின் கனவாக இருந்தது. அதற்கிசைய மிகச் சிறப்பாகக் கல்வி கற்ற சுதன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றான். அவனது கனவு நனவாகும் நாள் நெருங்கியது. லண்டன் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைத் தொடர்வதற்கான அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு அவனைத் தேடி வந்தது. அவனும் அவன்குடும்பமும் ஏன் அவனுடைய அயல்வீட்டார் என அனைவரும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அனைவரது ஆசியுடனும் கொழும்புக்குப் போகத் தயாரானான் சுதன். நேர்முகப் பரீட்சைக்கு முன்பு வேறு சில படிவங்கள் பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததால் இரு வாரங்கள் முன்னதாகவே கொழும்பு செல்லத் தயாரானான் சுதன். அங்கு அவனுடைய கிராமத்தைச் சேர்ந்த ஒருவனுடைய வீட்டில் தங்கும் ஏற்பாட்டுடன் புறப்பட்டான்.

"ஓம் அப்பா நான் ஒரு வம்புக்கும் போக மாட்டேன். ஏன் அம்மா இப்படி அழுறீங்கள்? நான் என்ன இதில கொழும்புக்குத் தானே போறன். போட்டு இரண்டு கிழமையில வந்திடுவன். கண்ணைத் துடயுங்கோ."

"ஓம் ராசா கவனமாப் போட்டு வாடாப்பா"

அண்ணா எங்களுக்கெல்லாம் என்ன வேண்டி வருவாய்?"

“எல்லாம் வேண்டி வாறன்”

“நல்ல உடுப்பு”

“ஓம் வேண்டி வாறன்”

“வடிவான சப்பாத்து”

“ஓமடா கட்டாயம் வேண்டி வாறன்”

“சரி சரி எல்லாரும் விடுங்கோ அவனை ,மோனை நீ கவனமாய்ப் போய் வாடா”

அனைவரும் பெருமையுடன் வழியனுப்ப கொழும்புக்குப் புறப்பட்டான் சுதன். கொழும்பு வந்தடைந்த அவனை வரவேற்றான் அவனது கிராமத்து நண்பன் . ஓரிரு நாட்கள் அவனுடன் ஊர்ப்புதினங்கள் கதைத்தும் கொழும்பைச் சுற்றிப்பார்த்தும் இனிமையாகப் பொழுதைப் போக்கினான்.

“டேய் சிவா இன்ரர்வியூக்கு சில ∴போர்முகள் வாங்க வேணும் இண்டைக்குப்போக உனக்கு ரைம் இருக்குமா?”

“ஐயோ இண்டைக்கு எனக்கு வேலை இருக்கு, நான் வாறது கஷ்டம் சுதன்”

“அது சரி சிவா நீ சொல்லவே இல்லையே? நீ இங்க என்ன வேலை செய்யிறாய்?”

“அது..அது வந்து .....அது இப்ப உனக்குச் சொன்னால் புரியாது. நேரம் வரேக்கை நானே சொல்லுறன்.”

“சரி விடு.....உனக்கு வேலை என்றால் பரவாயில்லை வாசு. நீ போ நான் போய் போர்முகளை வாங்கீற்று வாறன்”

“நீ தனியாவா போகப்போறாய்? சுதன்”

“ஏன் நான் என்ன சின்னப்பிள்ளையா? நான் சமாளித்துப் போய்வாறன். நீ போயிற்று வா.”

“சரி சுதன் கவனமாய்ப் போட்டு வா. நான் வர சிலவேளை நேரமாகும். நீ சாப்பிட்டுட்டு படு. என்ன? சரி நான் போட்டு வாறன்.

நண்பனுடைய துணையின்றி தனியாகப் புறப்பட்டான் சுதன். கொழும்பு நகரின் பரபரப்பையும் உயர்ந்த கட்டடங்களையும் இரசித்த வண்ணம் நடந்து சென்றான் சுதன். சிறிது தூரம் சென்றதும் திடீரென யாரோ அவனை உரசிச் சென்றாற்போல் இருந்தது. அதனைப் பெரிது படுத்தாமல் சென்றான். செல்லும் பொழுதுதான் அம்மாவுக்குச் சேலை வாங்க வேண்டும் என்ற ஆசை அவனுள்

உருவானது. அருகிலிருந்த துணிக்கடைக்குள் நுழைந்தான். அம்மாவுக்கு ஓர் அழகான சேலையைத் தெரிவுசெய்துவிட்டு அதற்கான பணத்தைக் கொடுப்பதற்காகத் தனது பேர்சைத் தேடினான். ஆனால் அதை அவனதுபையில் காணவில்லை. திடுக்குற்ற அவன் நன்றாகத் தேடிப்பார்த்து விட்டு குழப்பத்துடன் சேலையை வாங்காமல் வெளியே வந்தான். என்ன செய்வதென்றே அவனுக்குப் புரிய வில்லை.

"ஐயோ! என்ர பேர்ஸை காணவில்லையே! அதிலை தானே நான் கொண்டுவந்த முழுக்காசும். கடவுளே! இப்ப என்ன பண்றது. என்னட்ட ஒருசதமும் இல்லையே. என்னண்டு இப்ப போர்ம் வாங்கிறது?.... 'இப்பதான் ஞாபகம் வருது... அதில...அதில..நான் வரேக்க யாரோ என்னை இடிச்சிற்று போனானே. ஐயோ அவன்தான் என்ர பேரஸை எடுத்திருக்கிறான் இந்தக் கூட்டத்துக்குள்ள நான் எங்க அவனை கண்டுபிடிக்கிறது. போச்சு எல்லாம் போச்சு. வீட்ட போவம். சிவா வந்தபிறகு அவனிட்ட சொல்லி ஏதாவது செய்வம்." என்று எண்ணியபடி வீட்டுக்குச் சென்றான் சுதன்.

"என்ன சுதன் ஏன் இன்னும் தூங்கல?"

"டேய் சிவா, நான் வெளியில போகேக்க யாரோ ஒருத்தன் என்ர பேர்ஸ்ஸை களவெடுத்திட்டான்ரா.......என்ன பண்றதெண்டே தெரியலையடா...."

"டேய்......... என்னடா சொல்றாய்? கவனமாக இருக்கத் தெரியாதா? சரி, அதில காசு இருந்ததா?"

"ஓமடா, நான் ஊரிலை இருந்து கொண்டுவந்த மொத்தக் காசும் அதிலதான் இருந்தது....... இப்ப என்னட்ட ஒரு சதமும் இல்லையடா? போம் வாங்கக் கூட காசில்லை. அப்பா கஷ்ரப்பட்டு சேர்த்துத் தந்த காசு. டேய் சிவா எப்பிடியாவது பேர்ஸை களவெடுத்தவனைக் கண்டுபிடிக்க வேணும்."

"போடா கொழும்பிலை இரெண்டு பேருக்கு ஒருத்தன் திருடனாய்த்தான் இருப்பான். இங்க யாரைப் போய் எங்க தேடுறது. அது முடியாத வேலை."

"ஆனால் இப்ப காசுக்கு என்னடா செய்யிறது? என்னட்ட காசு இல்லையே?"

"என்னட்ட ஒரு ஐடியா இருக்கு. ஆனால் ...... நீ அதை செய்வியா எனக்குத் தெரியல்ல?. ஆனால் செய்தாயெண்டா உன்ர செலவுக்கு கொஞ்சக் காசு கிடைக்கும்."

"சொல்லு சிவா என்னெண்டாலும் செய்யிறன். என்ன வேலை செய்யணும்?"

"பெரிசா ஒண்டும் இல்லையடா. நான் தாற பொருளை நான் சொல்லுற அற்றசில கொண்டு போய்க் கொடுக்கணும். அவையள் காசு தருவினம். அதை வாங்கி அதில பாதியை நீ எடுத்திட்டு மீதியை என்னிட்டத் தா.என்ர பிரெண்ட ஒருத்தனும் உன்னோட வருவான். அதுதான் வேலை."
"ஏன்ரா அது என்ன அபொருள்? அதைக் கொடுத்தால் ஏன் காசு தரோணும்? அது ஏதாவது ........?"
"சேச்சே அது வெறும் மருந்தடா. வெளிநாட்டில இருந்து இறக்குமதி செய்து குடுக்கிறதால விலை அதிகம். என்ன நீ கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கிறாய். உனக்குப் போக விருப்பம் இல்லாட்டிச் சொல்லு. நான் வேற ஆளை அனுப்புறன்"
"இல்ல நானே போறன்."

கிடைக்கப் போகும் காசில் தனக்குத் தேவையான படிவங்களையும் வாங்கிவிட்டு ஊரில் அம்மா, அப்பா, தம்பி தங்கைகளுக்கும் ஏதாவது வாங்க வேண்டும் என்று எண்ணியபடி போனான் சுதன். கூடவே சிவாவினுடைய தொழில் நண்பனும் கூடவே சென்றான். போகும் வழியில் ஒரு இடத்தில் பொலிஸார் இவர்களுடைய மோட்டார் சைக்கிளை மறித்தனர். கண் இமைக்கும் நேரத்தில் பின்னால் அமர்ந்திருந்தவன் தாவி இறங்கி எங்கோ ஓடிப்போனான். சுதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. வழி மறித்த பொலிஸார்,

"என்னடா இது பையில?"
"அது ....... அது மருந்து சேர்."
"என்ன மருந்தா போதை மருந்தெண்டு சொல்லு"
"இல்ல சேர் எனக்கு எதுவும் தெரியாது. எண்ட நண்பன் தான் இதைத் தந்து ஒரு இடத்தில குடுக்கச் சொல்லித் தந்தவன். நான் லண்டன் யூனிவசிற்றி இன்ரவியூவுக்குத்தான் வந்தனான்"
"கஞ்சா கடத்திற எல்லாரும் இப்பிடி ஒவ்வொரு கதையைச் சொன்னா நம்பி விடுறதுக்கு நாங்கள் என்ன விசரங்களே. நடடா ஸ்ரேசனுக்கு"

சிறையில் அடைக்கப்பட்டான் சுதன். கனவுகளைத் தாங்கி வந்த அவன் கம்பிகளுக்குள் அடைக்கப்பட்டான். யாருமே அவனைப் பார்க்க வரவில்லை. காலங்கள் உருண்டு ஓடின. பதினான்கு வருடங்களின் பின் இன்று அவனுடைய

கனவுகள் புதைக்கப்பட்ட நிலையில் வெளியில் வந்தான் சுதன். அனைத்துமே மாறியிருந்தது. அனைத்து இடங்களுமே அடையாளங்காண முடியாதவாறு மாறியிருந்தது. ஒருவாறு ஜெயிலில் தந்த உதவிப் பபணத்தில் தனது கிராமத்துக்கு வந்து சேர்ந்தான். அவனுடைய கிராமமா இது? என அவனே வியக்கும் அளவிற்கு அனைத்தும் மாறியிருந்தது. அவனால் எதையுமே, யாரையுமே அடையாளம் காண முடியவில்லை. பல புதுமுகங்கள் தெரிந்தன. அவனுக்கு அறிமுகமான ஒருசிலரும் அவனை வெறுப்புடன் பார்த்து விட்டுப் பேசாமல் சென்றனர். சுதனிற்கு தான் செய்யாத குற்றத்திற்கு அனுபவித்த தண்டனையை விட தான் தனித்து விடப்பட்ட உணர்வு வெறுப்பையளித்தது. ஒருவாறு பழைய ஞாபகங்களின் படி தனது வீட்டை நோக்கிச் சென்றான். அவன் வாழ்ந்த வீடு பாழடைந்த வீடு போல் காட்சியளித்தது. அருகே சென்று பார்த்தான்.

"அம்மா"

"யார்....யார் அது?"

"நான் தான் அம்மா சுதன் வந்திருக்கிறன். சுதன் உங்கட மகன் திரும்பவும் வந்திருக்கிறன் அம்மா"

"என்ர ராசா சுதன் ...எனக்குத் தெரியுமையா நீ வருவாய் எண்டு....இந்தக் கட்டை வேகுறதுக்கு முதல் உன்னைப் பார்ப்பன் எண்டு தெரியமையா..."

"எங்கையம்மா அப்பா, தம்பி, தங்கைச்சிகள் எல்லாம்?"

"அப்பா நாலு வருசத்துக்கு முந்தியே வருத்தம் வந்து எங்களை தவிக்கவிட்டுட்டுப் போட்டார். அவளவையை சீதனம் கொடுத்துக் கட்டி வைச்சதுக்குப் பிறகு அம்மா எண்டு கூப்பிடக் கூட இந்தப்பக்கம் வாறதில்லை. சின்னவன் கட்டாருக்குப் போட்டான். அவன் தான் எப்பாலும் இந்தக் கிழவிக்கு கொஞ்சம் காசு அனுப்புவான். அந்தக் காசில தான் இன்னும் இந்த உயிர் ஊசலாடுது. நீ எங்கையையா போனனீ? அந்த சிவா நீ யாரோடையோ சேர்ந்து ஏதோ கடத்தி பொலீஸ் பிடிச்சு ஜெயில்ல இருக்கிறியாம் எண்டு சொன்னான். எல்லாச் சனமும் அவன் சொன்னதை நம்பீற்றுதுகள். சின்னவன் சொல்லிப் போட்டான் உன்னைத் தேடி ஒருத்தரும் போகக்கூடாதென்று. அவரும் ஊராற்ற பழிப் பேச்சுக் கேட்டுக்கேட்டு போய்ச் சேர்ந்திட்டார். எனக்குத் தெரியும் ராசா நீ எந்தத் தப்பும் செய்ய மாட்டாய் என்று"

“அம்மா நான் ஒண்டும் செய்யேல்ல அம்மா........ ஐயோ எல்லாம் அந்தச் சிவாவால தான். என்னை நம்புங்கோ அம்மா. நான் ஒண்டும் செய்யேல்ல அம்மா. ஐயோ..... என்ர படிப்பு, கனவு, லட்சியம் எல்லாமே போட்டுதே”

பதினான்கு வருட கால ஓட்டத்தில் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் எல்லாவற்றையும் அழுது கொட்டினான் சுதன்.

“நீ அழாதையப்பு. உனக்கு நானிருக்கிறன். என்ர பிள்ளை நீ மட்டும் தான். யார் என்ன சொன்னாலும் நான் உன்னை நம்புறன். என்ர ராசா நீ திரும்பி வந்ததே போதுமடா......”

காலத்தின் கோலத்தில் கசக்கப்பட்ட அவனுக்காக காத்திருக்கக் கடந்த காலங்கள் தயாராய் இருக்கவில்லை. அவன் தாய் மட்டும் இருந்தாள் அவனுக்காக....

* * *

## உறங்காத விழிகள் - 1

**சி.துளசிகரன்** – $13M_2$

இரவு ஓடிக் கொண்டிருந்தது இரயில் நிலையத்தில் ஒரு சிலரே இருந்தனர். பாதி வேலை முடிந்து விட்டது. ரயில் வரும்வரை காத்திருக்க வேண்டியது தான். கடைக்குச் சென்று ஒரு தண்ணீர் வாங்கிக் கொண்டு வந்து அமர்ந்தேன். இருக்கும் இத்தருணத்தில் என் அறிமுகம் உங்களுக்குத் தேவைதான். நான் அடுத்ததாகச் செய்ய இருக்கும் சில செயல்கள் உங்களுக்கு என்மேல் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தலாம். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. இந்த சமூகம், நாட்டைப் பற்றியெல்லாம் எனக்கு கவலையில்லை. எனக்கு இருக்கும் ஒரே துக்கம், கவலை, சந்தோஷசம் என்று இதர பிற உணர்ச்சிகள் எல்லாம் அவளைப் பற்றியது தான். அவள் - நித்தியா.

*

தெரிந்தவர் முகங்கள் எவரும் இல்லை. கண்டி புகையிரத நிலையம். ரயிலால் இறங்கினேன். மெதுவாக நடந்தேன். வழியில் வரும்போது பார்த்த பாலங்கள் குகைகள் என்று எவற்றிலும் உயிரைப் போக்கிக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ரயில் பாலத்தில் ஓடிக் கொண்டிருக்கும் போது எட்டிப் பார்த்தேன். அடி வயிற்றில் ஏதோ நோ எடுத்து பயம் வந்தது. குதிக்கவில்லை. ஸ்ரேசன் பிளாட் பாரத்தில் போய் இருந்து சுற்றிவரப் பார்த்தேன். வடை வியாபாரி தாய், தந்தை, குழந்தை, 'அலுவலர்கள் என்று எல்லோரும் அவரவர் உலகத்தில் இருந்தார்கள். என் உலகம் வெறுமையாக இருந்தது.

சேட் பையினுள் பாரத்தேன். நேற்று கடையில் வாங்கிய பிளேட் புதிதாக கிடந்தது. எடுத்தேன், உறைபிரித்து உள்ளங்கையைத் திருப்பி ஆழமாக வெட்டினேன். மெதுவாக இரத்த முத்துக்கள் எட்டிப் பார்த்தன. பின் தொடர்ந்து சிவப்பு இரத்தம் வெளியேறத் தொடங்கியது. எல்லோருக்கும் ஒரே நிற இரத்தம் தான் போலும் எவரும் எண்ணிடம் எதுவும் கேட்கவில்லை. சிலர் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தனர். நான்கைந்து நாட்கள் விழிகள் மூடாததால் என்னவோ எனக்குக் கண்ணீரும் வரவில்லை. வற்றிவிட்டது போலும்.

"ஏய் நீ என்ன பண்ணிட்டு இருக்கே?
மின்னலாக அவள் தோன்றினாள். கண்களை எதுவோ கட்டியது. அவள் பேசுவது மட்டும் கேட்டது. "என்ன ஆட்களடா நீங்கள் எல்லாரும்! அவன் வெட்டிட்டு நின்கிறான். அதைப் பார்த்துட்டு இருக்கிறீங்களே?" கண் விழித்த போது புது இடம், புது வீடு.

எழும்பிற்றிங்களா? பக்கத்தில பாலிருக்கு எடுத்துக் குடியுங்க"

அப்போது தான் கவனித்தேன் அருகில் அவள் இருந்தாள். வர்ணிக்கத் தேவையில்லை. ஒரு வார்த்தை போதும் அழகாக இருந்தாள். குடித்து முடித்ததும் கொஞ்சம் தெம்பு வந்தது. எழுந்து வந்து கையை நீட்டினாள். நித்யா என்றாள்.

யாஷ்ராஜ் என்றேன். பதிலுக்கு கையைக் கொடுத்தேன்.

'தெரியும் உன் ID காட் பார்த்தேன்.

ஊர் - யாழ்ப்பாணம்

வயது - என் வயது

எல்லாம் ஓ கே. நீ எதுக்கு எப்படி கையை வெட்டிக்கிட்டாய் என்று கேட்கப்போறதில்லை. ஏதாவது ஒரு சோகக் கதை வைத்திருப்பாய். எனக்கு கவலையில்லை. பட் இங்க நீ தங்கிறது கஷ்டம். எங்க தங்கப் போகிறாய்?"

நீண்ட நாட்களின் பின் சிரித்தேன். "என்ன சிரிப்பு" என்றாள். நான் வெளியில போய் என்ன வேலை செய்யப் போகின்றேன். என்று உனக்குத் தெரியுமா? என்ன உயிரை விடப்போகிறாயா என்றாள்? ஏண்டா எல்லாரும் இப்படி இருக்கிறீங்க என்றாள் சிரித்துக் கொண்டே. என்ன லவ் பெயிலியரா? என்றாள். நிமிர்ந்து பார்த்தேன். ஏதோ ஒன்று உள்ளிருந்து இவளிடம் சொல் என்றது. சொன்னேன். அப்பா 3 வயதில், அம்மா 15 வயதில் மடிந்தது. இருந்த பெரும் சொத்துக்களுக்காக உறவுகள் போட்டி போட்டு பாசத்தைப் பொழிந்தது. ஒவ்வொன்றாகப் பிடுங்கி எடுத்தது. எனக்குப் பிடித்த பெண்ணையும் அவர்களுக்கு பிடிக்காத சாதியிலும் திருமணம் செய்தது. அவளின் புற்று நோய் இறப்பு என் விரக்திகள் என் கவலைகள் எல்லாம் சொன்னேன். அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள். சரி இனி எதைப்பற்றியும் கவலைப்படாதே இதற்கெல்லாம் உயிரை விடாதே. வேலை வாங்கித் தாரேன் செய். கொஞ்ச நாள் இங்க இருந்து சமாளி பின் வேற இடம் பார் என்றாள். அவள் குரலில் ஏதோ இருந்தது. தலையாட்டினேன்.

*

நான் சாக முயற்சித்து ஐந்து வருடங்கள் முடிந்து விட்டது. இப்போது நான் ஓர் ஆர்.ஜே என் சிறுவயது கனவு தொழில் அது. எல்லாவற்றையும் எனக்காக அவள் செய்தாள். என் கவலைகளை வாங்கி என்னை மனிதனாக்கினாள். அதே போல் அவளையும் நான் மாற்றினேன். அவள் தொழிலை மாற்றினேன். உங்களுக்குத் தெரியாது அவள் ஓர் கால் கேர்ள். தூய தமிழில் விபச்சாரி என்பார்கள். இவ்வாறு எனக்கு உலகைப் புரிய வைத்த போது. நான் அவளை அவளுக்குப் புரிய வைத்தேன். தூரத்தில் வந்து கொண்டிருக்கிறாள். ஒவ்வொருவர் பார்வையும் ஒவ்வொரு மாதிரி. எனக்கு எப்போதும் அவள் அழகாகத் தெரிந்தாள். நெற்றி முடியை ஒதுக்கிக் கொண்டேன். "வேளைக்கு வந்திட்டா போல"

நீ எப்ப சொன்ன நேரத்திற்கு வந்திருக்கிற என்றேன். நீங்கள் சொன்னா நம்ப மாட்டீர்கள் எனக்குப் பிடித்தது எல்லாம் அவளுக்குப் பிடித்தது. ஆனால் வேண்டுமென்றே அழிச்சாட்டியம் பண்ணுவாள். நான் சுஜாத்தா பேஸ்ட் என்பேன்.

அவள் சுபா என்பாள். நான் ரகுமான் என்றால் அவள் ஹரிஸ் என்பாள். இப்போதும் அப்படித்தான். ஏதோ தொடங்கினாள் என் மடியில் படுத்தவாறே பார்க்கில் இருக்கும் பலரும் அப்படித்தான் ஒருவர் மடியில் ஒருவர் இருந்தார்கள். ஆனால் இங்கு அப்படி இல்லை.

ஏன் யாஷ் நீ எனி யாரையும் கல்யாணம் பண்ண போவதில்லையா? மௌனமாக அவளைப் பார்த்தேன். அவள் சொன்னாள் ஓகேடா நாம் இப்படியே இருக்கலாம் எனக்கு நீ போல உனக்கு நான். நமக்கு உடல் சார் இன்பங்கள் தேவையில்லை என்ன சொல்கிறாய்? சரி என்று தலையாட்டினேன்.

நீங்கள் நம்ப மாட்டீர்கள் நான் அவள் நண்பன். அவள் என் தோழி. காதலனோ காதலியோ, கணவனோ, மனைவியோ அல்ல காலம் முடியும் வரை இது மாறாது.

*

ஆனால் விதி காலம் இரண்டும் வலியது மீண்டும் என்னை மாற்றியது முற்றிலும் வேறொருவனாக. காரணம்,

பஸ் ஒன்றில் என் நித்யாவை கடத்தினார்கள், கற்பழித்தார்கள், கொலை செய்தார்கள். மொத்தம் மூன்று பேர் இப்போது அவர்கள் அடுத்தது யார் என்று தேடிக் கொண்டு திரிகிறார்கள். என் நாடோ நாட்டிலுள்ள சட்டமோ எனக்கு எதுவும் பண்ணவில்லை. பணத்தைக் கொண்டு அவர்கள் பகடையாடினார்கள்.

***

தூரத்தில் ரயில் வரும் சத்தம் கேட்டது. மெதுவாக எழுந்தேன். தண்டவாளங்களின் வழி நடந்தேன். இன்னும் அவன் மயக்கத்தில் இருந்தான் போத்தலில் இருந்த தண்ணீரை அவன் முகத்திலே ஊற்றினேன். கண் விழித்து மிரண்டான். கால்களை அசைத்தான் என் கயிற்றுக் கட்டுக்கள் அரங்கவில்லை. குனிந்து அவன் காதில் நித்யாவுக்காக என்றேன்

ம், ம் … என்று முனகல் மட்டுமே வாயிலுள்ள கைகுட்டையை மீறி வந்தது.

நான் எழுந்து நடந்தேன். ரயில் அருகில் வந்து விட்டது. என்னைக் கடந்து சென்றது. நீங்கள் நினைக்கலாம் நான் ஓர் கொலைகாரன் என்று

ஆனால் எனக்கென்று ஓர் தனி நீதி மன்றம் அமைத்து நானே நீதிபதி ஆகியுள்ளேன். நித்யாவுக்காக இன்னும் இருவர்.

அவளைப் போன்றவர்களின் அழிவுக்காக இன்னும் பலர்
என் விழிகள் இனி உறங்கப்போவதில்லை.

* * *

## ஊறங்காத விழிகள் - 2

**வி.விதூசன்** – $13A_2$

வழமைபோல் அன்றும் நிறை மாதக் கற்பிணிபோல் மினிபஸ் பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து ஆமை வேகத்தில் கைதடிச் சந்தியை அண்மித்துக் கொண்டிருந்தது. பாதை திறந்து தென்பகுதிக்கான சகல தொடர்புகளும் விஸ்தரிக்கப்பட்ட போதும் ஏன் நீண்ட தூர பஸ்கள் பல சென்றாலும் அவற்றைப் பார்த்து குறுந்தூரப் பயணிகள் கொட்டாவி விட்டுக் கொண்டு கொடிகாமம் பஸ்சை இல்லாவிடின் மினிபஸ்சைப் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டிய துர்ப்பாக்கியம். மாணவர்களாகிய எமக்கு இன்னமும் சொல்ல வேண்டியதில்லை. பயணத் துன்பம் தொடர்ந்து கொண்டே இருந்தது. நானும் எனது நண்பர்கள் இருவரும் இன்னும் எமது பாடசாலை மாணவர்கள் கிட்டத்தட்ட இருபதுபேர் வரை கைதடிச் சந்தியில் பஸ்சுக்கு அதில் காத்திருந்தோம்.

“ஓடிவாங்கோ, ஓடிவாங்கோ சாவகச்சேரி கொடிகாமம் உசன் போறாக்கள் ஓடிவாங்கோ” இது நடத்துனரின் அவசர அழைப்பு போகும் வேகத்தில் அதற்கு ஓடி ஏற வேண்டுமோ மனதில் எண்ணியவாறே பஸ்ஸில் நுழைய முற்பட்டேன். உள்ளிருந்து இறங்க முற்றபட்டவர்கள் இன்னமும் இறங்கியதாகத் தெரியவில்லை. ‘இறக்கம் இறக்கம்’ என்ற சத்தம் மட்டும் வந்து கொண்டிருந்தது.

“சின்னப்பிள்ளைகள் பின்னால பஸ் வருகுது. அதில் வாங்கோ பெரியாக்கள் ஏறுங்கோ புத்தக பாக்கை கலட்டி இருக்கிற ஆக்களிட்டைக் கொடுங்கோ தம்பி உனக்கு சொன்னது விளங்கேல்லையே. விளங்காட்டி இறங்கு

நடத்துனர் திறந்த வாயை மூடாமலே பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தார். காலை எழும்புவதில் இருந்து எத்தனை அர்ச்சனையைக் கேட்டாச்சு இது எல்லாம் இப்போது பழகிவிட்டது. சனம் இல்லா விட்டால் வாவா என்று குஞ்சு குருமான் ஒன்றையும் விடாமல் ஏற்றுவதும் ஏன் தொலைவில் ஒழுங்கையில் வருபவர் களைக் கூட வாவா என நின்று ஏத்துவதும் மாறாக பஸ் நிறைந்து விட்டால் குழந்தை, வயோதியர்களை ஏற்றாது போவதும் எங்கள் ஊர் பஸ்களின் சிறந்த மனிதாபி மானமாகவே இருந்து வருகின்றது. எத்தனைத்தான் பஸ்களின் தயாள மனந்தால் நேரம் பிந்தி பாடசாலையில் நுழைந்து, வகுப்பறையில் நுழைந்து எத்தனை ஏச்சுப் பேச்சுக்கள் நேரத்தின் பெறுமதி எல்லாம் இங்கே கண்மூடித்தன மாக செல்வதை யார் எண்ணிப் பாரக்கிறார்கள்? ஒழுங்காக ஒரு பஸ் நேரகாலத்துக்கு மாணவர்களுக்கென்று விடலாமே. பருவகாலச் சீட்டுக்கள் பக்குவமாகத் தூங்கிக் கொண்டிருக்கும் பாக்கில் நாம் பஸ்களுக்குத் தூங்க வேண்டியது தான் என்னைப்போல வறுமைப்பட்ட மாணவர்க்கு வரப்பிரசாத மாக அமைய வேண்டிய பஸ் துன்பகரமான வாழ்வை வழங்கிக் கொண்டு வருகின்றது.

உள்ளே நுழைவதற்கு இடமின்றி ஒருகையால் எட்டிக் கம்பியைப் பிடித்து தொங்கிக் கொண்டிருந்த என்னை நடத்துனர் உள்ளே தள்ளிக் கொண்டிருந் தார். "தம்பி பொலிஸ், பொலிஸ் வீணா எங்கள பைன் கட்டப்பண்ணாதேங்கோ"

எப்படியோ வாசலில் நின்றவர் களை எல்லாம் உள்ளே நுழைத்து விட அவர் எத்தணித்துக் கொண்டிருந்தார். என்மனதுக்குள் ஒரு விடுதலை உணர்வு. சனிக்கிழமையில் இருந்து இனிமேல் பஸ் ஏறும் வேலையில்லை. பஸ்சுக்காக தூங்கும், தொங்கும் சிரமம் இல்லை. என் துன்பத்திற்கு முற்றுப் புள்ளிவைக்க என் அம்மாவின் அதிக இரத்தம் வெயிலில் காயச்சப்பட்டு இருக்கின்றது என்பதும் எனக்குத் தெரியும். அப்பா இறந்து நான்கு வருடங்களில் என் அம்மா எலும்பும் தோலுமாகப் போய்விட்டார். நல்ல சிவலை இல்லாவிட்டாலும் கறுப்பு என்று இல்லாமல் இருந்த அம்மா இப்போது காய்ந்து கருவாடாக, வயலில் வேலை செய்து என் குடும்பத்தை தாங்கி பாவம் எல்லாம் என்னில் வைத்த நம்பிக்கை எப்படியும் படித்து நல்ல நிலைக்கு வருவேன் என்று..... கடவுள் அதைக் காப்பாற்ற வேண்டும்.

நடந்து திரியும் போதெல்லாம் போவோர் வருவோர் தருகின்ற இலவசப் போதனை 'தம்பி ஒரு சைக்கிள் வாங்கன் எத்தினை நாளைக்கு நடந்து திரியப் போறாய்?' என்பது தான் அப்பா உயிரோடு இருந்திருந்தால் நிச்சயம் என் O/L முடிவு வரமுன்னரே வாங்கித் தந்திருப்பார். ஏதோ இவ்வளவு நாளும் என் அம்மா என்றபடியால் குடும்பத்தைத் தாங்கி வந்தார். எனக்கு சைக்கிள் வாங்கித்தரும் அம்மாவின் முடிவு, அதற்காக அம்மா பட்ட கஷ்டம் மிகவும் பெரியது. சைக்கிள் 'அம்மா வாங்கித் தருவதாகக் கூறிய செய்தி பல்கலை அனுமதி கிடைப்பதைவிட என்னை மகிழ வைத்தது. சிறுகச்சிறுகச் சேர்த்து சீட்டுப் பிடித்து அம்மாவின் முயற்சி யாரால் முடியும். சின்னச் சின்னத் தேவைகளுக் கெல்லாம் நடந்தே சென்று காரியம் முடித்தாலும் தூர இடங்களுக்கச் செல்வதானால் கணேஷ் இடம் சொல்லி வைப்பேன். அவன் தன் அப்பாவின் சைக்கிளை வாங்கி வந்து விடுவான். இரண்டுபேருமே சென்று திரும்பி வரும்போது கணேஷின் அப்பாவுக்கு தனியான நன்றியைக் கூறி வருவேன். இனிமேல் கணேஷின் அப்பாவுக்கும் தொல்லை கொடுக்க வேண்டியதில்லை. கணேஷ் கூட இனிமேல் என்னுடன் சைக்கிளில் தான் வருவான். கைதடி நூலகம் தான் நாம் அதிக நேர பயனைப்பெறும் ஒரே இடம். ரியூசனை எட்டிப்பார்க்காது பாடசாலைப் படிப்புடன் கைகொடுக்கும் ஒரே அறிவுத் தொகுதி அது என் நண்பர்களுடன் பயனுடன் கழியும் இடமும் அது தான்.

நேரம் எட்டுமணியாகிக் கொண் டிருந்தது. 7.20 க்கு பஸ் ஏறி இன்னமும் இறங்கியபாடில்லை. இன்றும் காலைப் பிரார்த்தனை நேரம் தான் போய்ச் சேருவோம். சாவகச்சேரி பஸ்நிலையத்தில் தேவையில்லாமலே பஸ்சை வைத்துக் கொண்டு இருந்தாலும் என்ன செய்ய முடியும். மாணவர்களின் அவசரமோ வேலைக்குச் செல்பவர்களின் அவசரமோ அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. எப்படியோ பணத்தைப் பெற்றுக் கொண்டு தாம் செல்லும் நேரம் தான் உங்கள் நேரம் என்பது போல் செல்வார்கள்.

காலைப் பிரார்த்தனை முடிந்து வகுப்புக்கள் தொடங்கி விட்டன. நாம் வாசலில் பல கேள்விக் கணைகளுக்கு முகம் கொடுத்து வகுப்பறைக்கு நுழைவதற் கிடையில் மனம் ஏதோ உலகில் இருந்து வந்ததைப் போல பிரமித்துக் கொண்டிருந்தது. வழமைக்கு மாறாக மனதில் ஒரு கனம் இனம்புரியாத பய உணர்வு மனதில் இருந்து கொண்டோ இருந்தது. மூன்றாம் பாடவேளை. அதிபர் அலுவலகத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது.

PERMANENT REFERENCE
J/Chavakachcheri Hindu College

காரணமில்லாமல் பயம் மீண்டும் பற்றிக் கொண்டது. ஏதாவது பிழை நடத்துவிட்டதா? புவியியல் பாடம் நடந்து கொண்டிருந்ததால் பாட ஆசிரியரிடம் கூறிவிட்டு அலுவலகத்தை நோக்கி விரைவாக நடந்தேன். பிரதியதிபர் தான் கூறினார். அம்மாவுக்கு ஏதோ சுகமில்லையாம் உம்மை வரட்டாம் தகவல் தந்தது உமது பெரியம்மா. எதுவும் செவிகளில் ஏறவில்லை. சேர் நம்பமுடியாது திரும்பவும் கேட்டேன் பயப்படத் தேவையில்லை அவை பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு போயினமாம். உம்மை அங்கு வரட்டாம் இருள் சூழ்ந்து உலகம் அழியப் போவதாகக் கூறினார்களே. அது இக் கணமே நடந்ததுபோல் என் கண்கள் இருண்டன. மனம் கடவுளே காப்பற்று காப்பாற்று என்று ஓலமிட்டது. மீண்டும் , பஸ்ஸுக்காய் காவல் மீணடும் மினிபஸ் அதே நெரிசல் எனினும் என்னையாரும் நெரிப்பது தெரியவில்லை. மனது நெரிந்து கொண்டிருந்தது. அவசர சிகிச்சைப் பிரிவில் என் அம்மாவைச் சேர்ந்திருப்பதாக பெரியம்மா ஆஸ்பத்திரி வாசலில் நின்று சொன்னார். என்ன நடந்தது.

"வயலில் புல்லுப் புடுங்கிவிட்டு நடராசா வீட்டில சீட்டுக்காசு வேண்டிக் கொண்டு வந்திருக்கிறாள். மோட்டுச் சைக்கிளில் வந்த ரெண்டுபேர் அடிச்சு விழுத்திப்போட்டு காசையும் பறித்துக் கொண்டு ஓடிட்டாங்கள். பின்னால வந்த ஒரு சின்னபிள்ளை தான் கண்டு சனத்தைக் கூட்டி வந்து காட்டினது அதுக்குப் பிறகு சனம் எனக்குச் செல்லி இங்க ஓட்டோ பிடிச்சு கொண்டுவந்தேன். தலையில் அடிபட்டிட்டுது. அதால மயங்கிப் போனாள். மயக்கம் தெளிஞ்சாத்தான் என்ன நிலைமை என்று தெரியும். பெரியம்மா கண்ணீரமல்க சொல்லிக் கொண்டிருந்தான். என் கண்முன் உலகம் அழிவது தெரிந்து கொண்டிருந்தது. நீதி நியாயம் எல்லாம் மரணித்தின்பின் மனிதர்கள் மட்டும் உயிரோடு இருந்து என்ன செய்வது. களவு எவ்வளவு சுலபமான தொழில் அம்மா........ அம்மா......... அழுது கொண்டு அங்கேயே அமர்ந்து கொண்டேன். அம்மாவுக்கு செயற்கைச் சுவாசம் வழங்கப்பட்டிருந்தது. எக்ஸ்றே, ஸ்கானில் எல்லாம் எடுக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுவதாக அவ்வப்போது தகவல் அறிந்து கொ்ண்டோம். மாலை ஆறு மணி அம்மா மெல்ல மெல்ல க்ண்விழித்து மூடிக் கொண்டிருந்தார். எங்களை அம்மாவுக்கு தெரிந்திருக்க வேண்டும். அம்மா கையை அசைத்து என்னைக் கூப்பிடுவது போல் இருந்தது. "தம்பீ... அம்மா வாய்திறந்து கூப்பிட்டார் தம்பீ.. சைக்கிள்..." அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டேன். "அம்மா சைக்கிளும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் நீங்கள் சுகமாய் வீட்டை வாங்கோ. அதுவே போதும் நீங்க சுகமா வந்தா எனக்கு


உலகத்தை விலைகொடுத்து வாங்கியது போல் இருக்குமம்மா" என்றேன். அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. இது வரை எம்முடன் பயணித்த அம்மா இன்னும் எம்முடன் பயணிக்க வேண்டும். அதற்காக நான் எத்தனை பஸ் பயணத்தையும் ஏற்கத் தயாராக இருந்தேன்.

* * *



ச.லதுஷிகன் - 7A




சி.அபிசன் - 7A


பு.சயன் - 7B





வி.கீர்த்திகன் - 9A





சி.சிவகங்கவி - $10^{D}$






த.ராதிகா - 10F



க.பிரியங்கன்



லவன்

# நூலக சேர்க்கைகளின் கண்காட்சி பற்றிய அறிக்கை

இடம் - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி நூலகம் (மேற்றளம்)

நேரம் - மு.ப 9.30 - பி.ப 2.30

மேற்படி நிகழ்வானது திட்டமிட்டபடி "அரும்பொருளும் ஆக்கப்பொருளும் கண்காட்சி" என்னும் தலைப்பினோடு எமது கல்லூரி அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நூலகக்குழுவினரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் மங்கல விளக்கேற்ற தொடர்ந்து வலயக்கல்வி அலுவலக அழகியல்பாட உதவிக்கல்விப்பணிப்பாளர். க. கைலாசநாதன் அவர்களும் கல்லூரி பிரதி அதிபர்களும் நூலக ஆசிரியரும் மங்கல விளக்கேற்றினர். அதனைத் தொடர்ந்து கல்லூரி முதல்வர் நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

மாணவர்களின் கைவண்ணத்தினால் கழிவுபொருட்கள் எல்லாம் அழகிய காட்சிப்பொருட்களாக, பயனற்ற பொருட்கள் எல்லாம் மிகுந்த மதிப்போடு காட்சிதந்தமை பார்வையாளர்களைப் பரவசப்படுத்தின. வீசப்படும் வெற்றுப்போத்தல்கள் பூச்சாடிகளாகவும் பேப்பர் துண்டுகள் பூக்களாகவும் மரத்தின் காய்ந்த கழிவுகள் சுவர் அலங்காரப் பொருட்களாகிக் காட்சிதந்தன. வண்ணப் பேப்பரில் பறவைகளும், தேங்காய்ச் சிரட்டைகளில் பூச்சாடிகளும் அனைவர் மனதையும் கவர்ந்தது. போட்டிகளில் வெற்றி பெற்ற சித்திரங்கள் மாணவர்களின்தூர சிந்தனையைப் பிரதிபலித்தன.

தொன்மையான, அருமையான, எமதுபண்டைய வாழ்வியற்பொருட்கள் எமது மாணவர்களால். சேர்க்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டமை அருமையாகவே இருந்தது. பித்தளைப் பொருட்கள், வெண்கலப் பாத்திரங்கள், மட்பாண்டப் பொருட்கள், பனையோலைப் பன்னங்கள், தென்னோலைப்பின்னல்கள், என இன்றைய மாணவ சமுதாயம் அறிந்திராத பொருட்கள் எல்லாம் காட்சிதந்தன.

வரலாற்றுப்புகழ் மிக்க இடங்கள், வெளிநாட்டு முத்திரைகள்,உள்நாட்டு முத்திரைகள்,வெளிநாட்டு நாணயங்கள்,உள்நாட்டு நாணயங்கள் என பாகு படுத்தப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

“ஏடறியோம் ஏட்டு எழுத்தறியோம்” என இருந்த மாணவ சமூகத்திற்கு ஏட்டைப்பார்த்து ஏட்டின் எழுத்தைப் பார்க்கச் செய்தது இக் கண்காட்சி. இடைக்காலங்களில் தோன்றி நின்று போன சஞ்சிகைகளும் தொடர்ந்து வரும் சஞ்சிகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டு மாணவர்க்கு தகவல்களை வழங்கின. 3D முறையில் கணினி வன்பொருள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இது நவீன கற்றலாக கற்றல் வள நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததோடு மாணவர்களின் வரவேற்பையும் பெற்றுக் கொண்டது.

இந்நிகழ்வில் எதிர்பாராத விதமாக தென்மராட்சிக் கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர். திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களும் யாழ் மாவட்டத்தில் அண்மையில் கல்வி நிர்வாக சேவையில் கடைமையேற்ற உத்தியோகத்தினரும் கலந்து கண்காட்சியைப் பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்க விடயம். மேலும் தென்மராட்சி வலயக்கல்வி நூலக பொறுப்பாசிரியரும் ஆசிரிய ஆலோசகருமாகிய திருமதி.சி.உருத்திரமூர்த்தி அவர்களும் கலந்து கொண்டு எமக்கு உற்சாகத்தை வழங்கினார்.


பாடசாலை மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட போதும் கண்காட்சியை பலரும் பார்வையிட்டு நல்ல கருத்துக்களை வழங்கியதோடு பாராட்டியிருந்தனர்.

* * *

















KUWAIT










# நன்றியுரை

"இந்துகேசரி" எனும் இச்சஞ்சிகையாக்கத்தை மேற்கொள்ள சகல வழிகளிலும் ஆலோசனை வழங்கிய தென்மராட்சி வலயக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி.சி.உருத்திரமூர்த்தி அவர்களுக்கும் வலயக் கல்விச் சமூகத்தினருக்கும், சகல வளங்களையும் ஏற்படுத்தித்தந்த கல்லூரி முதல்வர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களுக்கும் பல்வகையிலும் உதவிய பிரதியதிபர்களுக்கும், வழிகாட்டியும், போட்டிகளை நடாத்தவும் மதிப்பிடவும் கண்காட்சியை நல்லபடி நடாத்த உடன் உதவிய ஆசிரியர்களுக்கும், போட்டிகளில் பங்கெடுத்தும் கண்காட்சி ஒழுங்கமைப்புக்கு ஒத்துழைப்பும் நல்கிய வாசகர் வட்ட மாணவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள். இச்சஞ்சிகையை அச்சிட உதவிய உள்ளங்களுக்கும் நன்றிகள்.

மாணவர்களின் எழுத்துக்களை நூலுருவில் காண சந்தர்ப்பம் அளித்த கல்விச்சமூகத்திற்கு எம் மனமார்ந்த நன்றிகள்